செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௩, ஆடி	பரல்
௩௬	ஆகஸ்டு, 1962	௧௨

மறைமலையடிகள் கலைமன்றம்

இக்கலை மன்றத் திறப்பு விழா, பல்லாவரத்திலுள்ள மறைத்திரு மறைமலையடிகளார் மாளிகையில் 12-7-62 மாலை 6-15 மணியளவில் மதுரையாதீனம் அருட்டிரு சோமசுந்தர ஞானசம்பந்த அடிகளார் தலைமையில் மிகச் சிறப்புற நடைபெற்றது. விழா நிகழ்ச்சிகள் வருமாறு ;

திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களின் வரவேற்புரை

மெய்யன்பர்களே! இங்கே எழுந்தருளியிருக்கும் மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனத் தலைவர் அருட்டிரு சோமசுந்தர ஞானசம்பந்த அடிகளார் அவர்கள் இவ்விழாவுக்குத் தலைமை தாங்குவது மிகமிகப் பொருத்தமாகும். அடிகளார் அவர்கள் மறைமலையடிகளுடன் நீண்ட காலம் தொடர்பு கொண்டிருந்தவர். இவ்விழாவிற்குத் தலைமை தாங்க அடிகளார் அன்புடன் இசைவளித்தது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. மறைமலையடிகள் மன்றத்தின் திறப்பு விழாவை நடத்துவதற்கு மிகப் பொருத்தமானவர் நம் கல்வி—நிதி அமைச்சர் அவர்களே. அவர்களுக்கும் இப்பணியைப் புரியும் கழகத்திற்கும் நீண்டகாலம் தொடர்பு இருந்து வருகிறது. 1947 ஆம் ஆண்டில் நெல்லையில் இருபதாம் நூற்றாண்டு பேதையான பேராசிரியர் தாகூர் சட்ட விரிவுரையாளர் கா. சு. பிள்ளை அவர்களின் நினைவுக்குறியாய் நிலைபெறு நடுகல்லை நாட்டினார்கள். 1958 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் மறைமலை அடிகள் நூலகத்தை மாநில ஆளுநர் மாண்புமிகு விட்ணுராம் மேதி அவர்கள் தலைமையில் திறந்து வைத்தார்கள். 1961 ஆகஸ்டில் கழகம் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு

விழாவைக் கொண்டாடியபோது அமைச்சர் அவர்கள் அவ்விழாவிற்கு மிகப் பொருத்தமான ஆயிரத்தெட்டாவது வெளியீடான பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டைத் தம் கையால் வெளியிட்டார்கள். பின்பு சில திங்கள் கழித்துச் சங்க இலக்கிய உரை வெளியீட்டு நிறைவு விழாக் கொண்டாடப்பட்டபோது அவ்விழாவில் கலந்து கொண்டு மதுரை உயர்திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் தலைமையில் ஐங்குறுநூறு உரைநூலை வெளியிட்டார்கள். பின்பு சிறந்த காப்பியங்களில் ஒன்றான சூளாமணி உரை வெளியீட்டு விழாவில் அந்நூலையும் வெளியிட்டார்கள். இப்போது கல்வி நிதி அமைச்சராக இருந்து இக்கலை மன்றத் திறப்பு விழாச் செய்வது நம் பாக்கியமேயாகும்.

இக்கலை மன்றம் மிகப் பேரளவில் வளர்ந்து விளங்க வேண்டும்; வந்து காண்பார் எல்லார்க்கும் மகிழ்ச்சியும் உணர்ச்சியும் தருவதாயிருக்கவேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் எழுந்தது. உண்மையில் அவ்வெண்ணத்தை மறைமலையடிகளாரே என்னுள்ளத்தில் தோற்றுவித்தார்கள். அவர்கள், தோன்றாத்துணையாய் நின்று என்னுள்ளத்தை இயக்கி வருவதற்குச் சான்றுகள் பல யான் காட்டி அவ்வுண்மையினை மெய்ப்பிக்க முடியும். நெல்லையில் வறிய நிலையில் உள்ள ஓர் இயக்குநர் மூலம் மறைமலையடிகள் எனக்குப் பல செய்திகளை உணர்த்தியிருக்கிறார்கள். அவையெல்லாம் உண்மையாகி வருகின்றன. இக்கலை மன்றத்தைப் பற்றி வெள்ளியன்றுதான் இயக்குநர்க்குக் கடிதம் எழுதி அறிவித்தேன். ஞாயிற்றுக்கிழமையே காஞ்சியில் வாழும் தமிழ்ப் பெரும் புலவர் கண்காணியாகிய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் அடிகளுக்கும் அமைச்சர்க்கும் தனித் தனி வாழ்த்துரையனுப்பியிருக்கிறார்கள். விரும்பினால் அச்சிட்டு வழங்குதல் செய்க என்று எனக்கும் அறிமுகக் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார்கள்.

மறைமலையடிகள் 1911 ஆம் ஆண்டில் இந்த இடத்தை வாங்கி இக் கட்டிடத்தைக் கட்டினார்கள். இதனைக் கட்டுவதற்கு என் அருமைத் தமையனார் திரு. வ. திருவரங்கம் பிள்ளையவர்கள் கொழும்பிலிருந்து பணந்திரட்டி உதவிவந்தார்கள். 20-8-1915இல் அடிகளார் என் தமையனார்க்கு எழுதிய கடிதம்:

"நமது திருமடத்தின் கட்டிட வேலை முற்றும் நிறைவேறியது; இனிச் சுண்ணாம்புப் பூச்சு வேலைதான் நடக்க வேண்டியிருக்கின்றது. இது வரையில் ஆறாயிர ரூபாவுக்குமேல் செலவாய்விட்டது. கையிலிருந்த காசெல்லாம் செலவாய் விட்டமையால், பூச்சு வேலைக்கும் குடும்பச் செலவிற்கும் பணம் இன்றி மிகவும் முட்டுப்பட்ட நிலையில் இருக்கின்றேன். பூச்சு வேலைக்குக்

குறைந்தது இன்னும் அறுநூறு ரூபா வேண்டும். மடத்தின் தோட்டத்தைத் திருத்தவும் மற்றைச் சில்லறைச் செலவுகளுக்கும் இன்னும் நானூறு ரூபா வேண்டும். ஆகவே, இன்னும் ஆயிர ரூபா இருந்தால் எல்லாம் ஒழுங்குபடும். தாங்கள் இச்சமயம் அங்குப் பெருமுயற்சி செய்தால் இத்தொகை சேர்த்து உதவக் கூடும். இச் சமயத்தில் நம் திருமடத்திற்கும் எனக்கும் உள்ள இடையூறுகளெல்லாம் விலகி நம் காரியங்கள் ஒழுங்கு படுமாயின், இனி நாம் நடத்த வேண்டிய அரும் பெருங் காரியங்கள் எல்லாம் நன்கு நடைபெறும். இயற்கையிலேயே உபகார சிந்தையும், நன்முயற்சியும் உடைய தங்களுக்கு இவைகளை பற்றி யான் மிகுதியாய் எழுத வேண்டுவதில்லை.''

அடிகள் இம்மாளிகையின் பின் புறப் பகுதியை 1916இலும் முன் பகுதியையும், மாடியினையும் 1930 இலும் கட்டி முடித்தார்கள். அம்பலவாணருக்குத் தனியாக மாளிகைக்குள்ளேயே கோயில் கட்டி அக் கோயிலிலே அமைக்கப் பெற்றிருக்கும் அம்மை அம்பலவாணர்க்கு 1931 இல் திருக்குடமுழுக்கு (கும்பாபிடேகம்) நடத்தினர். அத்திருமுழுக்காட்டு விழாவை முன்னின்று நடாத்தியவருள் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர் நம் நிதி அமைச்சரின் மாமனர் உயர்திரு. சி. என். முத்துரங்க முதலியார் அவர்கள் ஆவர். அன்னார் செய்த உதவியைக் குறிப்பிட்டு அடிகள் எழுதிய குறிப்பு.:

திருவாளர் சி. என். முத்துரங்க முதலியார் பி. ஏ. அவர்கள் செய்த பேருதவி

"அடிகள் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியராய் இருந்த காலத்து அவர்கள்பால் கல்வி பயின்ற மாணவரும், பொதுநல ஊழியத்தில் மிகவும் ஈடுபட்ட பெருஞ் சிறப்பு வாய்ந்தவரும், பெருஞ் செல்வரும் ஆகிய சைவத் திருவாளர் சி என். முத்துரங்க முதலியார் அவர்கள் பி. ஏ., அடிகளிடமிருந்து கடிதம் பெற்றவுடனே, அடிகள்பாற் போந்து நூறு ரூபா காணிக்கையாக உதவியதோடு, கழக விழாவின் மாப்பேரவை கூடுமிடத்தில் தமது செலவிலேயே அழகிய அகன்ற பந்தலும் அமைப்பித்துக் கொடுத்தார்கள். அதுவேயு மன்றிச், சைவ வேளாளச் சமையற்காரர்களையும் அனுப்பி வைத்தார்கள். சமையலுக்கு வேண்டிய பெரிய பெரிய பித்தளை ஏனங்களையும் அனுப்பி வைத்தார்கள். இவர்கள் செய்த இப்பேருதவியினலேயே விழாவிற்கு வந்த அன்பர்கள் மிக வசதியாக இருக்க இடம் பெற்று மகிழ்ந்தார்கள். இவர்கள் செய்த உதவியினலேயே கழக விழா மிகவுஞ் சிறப்பாக நடைப்பெற்றது. இங்ஙனம் உற்ற

நேரத்திற் பேர் உதவி செய்த இப் பெருந்தகையாளர்க்கு எல்லா நலங்களும் மேன்மேற் பெருகுக என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.''

ஆதலால் கனம் மந்திரி அவர்கள் மனமிசைந்து இங்கு வந்து மன்றத்தைத் திறந்து வைத்தமை மிகவும் பொருத்தமாகும்.

மாளிகை விலைக்கமைந்த வகை

அடிகளாரின் மாளிகையை அரசாங்கமே வாங்கிக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்திடம் விண்ணப்பங் கொடுத்து வேண்டினோம். அப்போது கல்வி - நிதி அமைச்சராக இருந்த உயர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அரசாங்கம் அவ்வாறு வாங்கி நினைவு மன்றம் நடத்துவதற்கில்லை; ஆனால் தக்கதொரு பொது நிலையம் முன்வந்து வாங்குவதானால் அரசு பொருளுதவி செய்யும் என்று கூறினார். மேலும் ''மத்திய அரசினர்க்கும் விண்ணப்பம் செய்யுங்கள்; நாங்கள் சிபாரிசு (பரிந்துரை) செய்கிறோம்'' என்றும் கூறினார். நாங்கள் அவ்வாறே விண்ணப்பம் அனுப்பினோம். பின்பு பொறியியல் வல்லாரைக் கொண்டு இம் மாளிகைக்கு ரூ. 40,000 மென விலை மதிப்பிட்டு மத்திய அரசினர் ரூ. 25,000மும் தமிழக அரசினர் ரூ. 10,000மும் நன்கொடையளித்தனர். சைவசித்தாந்த சங்கத்தினராகிய நாங்கள் மேற்கொண்டுள்ள 5000 ரூ. வும் வழங்கி இம் மாளிகையை விலைக்குப் பெற்றோம். மேலும் பல ஆயிர ரூபாய்கள் செலவு செய்து, பன்னிரண்டாண்டுகளாகப் பயன்படுத்தப் பெறாதிருந்த இம் மாளிகையைப் பழுது பார்த்தோம். இன்னும் எல்லாக் காரியங்களும் முற்றுப் பெறவில்லை.

இம் மாளிகையைச் சிறந்த கலைக்கூடமாக்கியும், சைவ சித்தாந்த வகுப்பு, திருக்குறள் வகுப்பு, தேவார திருவாசக இசை வகுப்புக்கள், இசை, நாடகம் பற்றிய ஆராய்ச்சிகள் முதலியன நடக்கும் ஆராய்ச்சிக கூடமாகவும் ஆக்கவேண்டும் என்று விரும்புகிறோம். அடிகளார் படித்த நூல்கள் சென்னை இலிங்கச் செட்டித் தெருவிலுள்ள 'மறைமலையடிகள் நூல் நிலையத்திலேயே' இருக்கும். ஆனால் அவர் எழுதிய நூல்களின் கையெழுத்துப் படிகள் இங்கே இடம்பெறும். பல்லாவரத்தில் வாழும் மக்களும் இந் நன்முயற்சிக்கு உதவுவார்களாயின் இஃது ஒரு சிறந்த கலைமன்றமாகத் திகழ்ந்து விளங்கும்.

சிறந்த முறையில் தம் வாழ்க்கையைத் திட்டமிட்டுக் குறிக்கோளுடன் வாழ்ந்தவர் அடிகள். அதனால் வேறு எப்புலவர்க்கும்

இல்லாத வியத்தகு முறையில் அடிகளாருக்குச் சிறந்த ஒரு மாளிகை உறையுளாக அமைந்து விளங்கிற்று.

இம் மன்றத்தைப் பொறுத்தவரை இன்னும் பல திட்டங்களும் இறைவன் திருவருளால் நடைபெறும். அமைச்சர் அவர்கள் இன்னும் வேண்டிய உதவியும் நலங்களும் கட்டாயம் செய்வார்கள். அண்மையில் இராமகிருஷ்ண மடத்திற்குத் தமிழ் நாட்டு அரசு ஒரு இலட்சம் ரூபா கொடுத்துள்ளது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழுக்கும் சைவத்திற்கும் பணி புரிந்து வந்து கொண்டிருக்கிறது. தமிழ், சைவ வளர்ச்சிக்காக இரண்டு அறநிலையங்களை வைத்து வளர்த்து வருகிறது. இக் கழகத்திற்குக் கிடைக்கும் ஆதாயத்தில் பாதி அவ்வறநிலையங்களைச் சேரும். எனினும் அவற்றிற்கும் மத்திய அரசு வரி விதித்து விட்டது. அவ்வற நிலையங்களின் மெய்ம்மையினையும் தொண்டினையும் மேலிடத்துக்கு எடுத்துக் காட்டி விலக்களிக்குமாறு விண்ணப்பித்த பின் திருவருட்டுணையால் விலக்கும் அளித்துள்ளனர்.

இக்கலை மன்றத்திலே அடிகளார் வாழ்ந்த காலத்தில் புழங்கிய பொருள்கள், எழுதிப் பதிப்பித்த முதற் பதிப்பு நூல்கள், பிற் பதிப்பு நூல்கள், கையெழுத்துப் படிகள், கடிதங்கள், அடிகளார் அணிந்த மாதிரி உடைகள், கட்டை கான்வாசு மிதியடிகள், கழுத்தில் அணிந்திருந்த சிவமணி, மூக்குக்கண்ணாடி, பூதக்கண்ணாடி, அடிகளாரின் பல்வேறு நிலை உருவப்படங்கள், மாணவர் ஒன்பதின்மர் உருவப்படங்கள், புலவர் கடிதங்கள், கைச்சாத்துக்கள், அடிகளார் தம் கைப்பட எழுதியுள்ள சோதிடக் குறிப்புக்கள் முதலியன காட்சிக்கு வைக்கப்பெற்றிருக்கின்றன. அடிகளார் வழிபட்டு வந்த அம்மை அம்பலவாணர் நால்வர் திருவுருவங்கட்கு நாளும் முறையே வழிபாடு நடைபெறுகின்றது.

இதன்பின் திரு. வ. சு. அவர்கள் காணுவுலகவாசியான பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அருட்டிரு சோமசுந்தர ஞானசம்பந்த அடிகளார்க்கும், மாண்புமிகு அமைச்சர் பக்தவத்சலம் அவர்கட்கும், அனுப்பிய வேண்டுகோள் வாழ்த்துரைகளைப் படித்தளித்தார்.

அருட்டிரு சோமசுந்தர ஞானசம்பந்த அடிகளாருக்கு அனுப்பப்பட்ட வேண்டுகோளுரை :—

அன்பே சிவம்

மறைமலையடிகள் கலைமன்றத் திறப்புவிழாத் தலைவர்

மதுரைத் திருஞானசம்பந்த ராதீனம்

திருவருட்டிரு சோமசுந்தர ஞானசம்பந்த அடிகளார்க்கு

வேண்டும் பணிவுரை

ஒழுக்கம் பிழையா வரன்முறை பற்றுஞ் சைவத் தேசிக!

நிலைபெறும் சைவ உண்மை, வேதநெறி நிற்கும் நன்னெறி கைவிட்டு நவைநெறி ஒப்பிய தென்னவன் நாட்டில்,

'அந்த ணாளர் புரியும் அருமறை, சிந்தை செய்யா அருகர் திறங்களைச்,
சிந்த வாது செயத்திரு வுள்ளமே, வெந்த நீற தணியும் விகிர்தனே,
ஞாலம் நின்புகழே மிக வேண்டுந்தென், ஆல வாயில் உறையும்எம் ஆதியே'

என இன்றமிழ் மறைதந்த ஞானமணி விளக்காம் கலைச்செழுத் திங்கள்; ஞானமுண்ட திருஞானசம்பந்தப்பெருமானார் ஆலவாய் அண்ணலை, செந்தமிழ்மாலை சிறப்பித்தேத்தி, அந் நவைநெறி அகற்றித் தெய்வத் திருநெறி தழைத்து நிலையுடைச் சைவத்துறை விளங்கும் நந்தனிச் சமய நந்தன்னை நாட்டுமாறமர்ந்த ஆலவாய்த் திருமடத் தலைவனு யமர்ந்து அண்டினர்க் கருளமுதூட்டுகை, தில்லையம்பலத்தாடும் அப்பனின் அருட்செயலே என நினைந்து நின்கழல் வணங்குதும்.

மல்லல் நெடுந்தமிழால் மறைதந்த வளர்ஞானப் பொறையணி முகிலின் பின்னோய்!

அன்று ஆலவாய் நாட்டிய முன்னவன் புகழினை இன்று நீ குமரியின் எல்லையில் நாட்டிய வண்திறன் ஈடுசெய் சிறப்பென, தலைச்சங்கப் புலவனார் உணர்த்திட, தண்டமிழ் நாட்டின் தலைநகர்ப் பரப்பின் பாங்குடைப் பல்லாவரப் பழந்தமிழ்ப் பதிக்கண் சைவத்திருநெறி பற்றி எண்குணத்தெழிலின் சீருடைச் சிறப்பெலாம் செவ்வனமாய்ந்து, தீஞ்சுவைத் தமிழில் யாங்கணும் முழக்கிய பன்மொழிப்புலவன், மறைத்திரு மறைமலையடிகளின் நினைவி னெழுப்பிய கலைமன்றத் திறப்பில் நின் தலைமையே சால்பென உணர்ந்த தென்னிந்திய சைவசித்தாந்த சங்கச் சிந்தையிற் களிப்புடை அமைச்சனார் அழைத்தமை, மறைமலை யடிகள் போற்றிய அம்மை அப்பனின் அருட்பெருஞ் சிறப்பென நன்று கண்டாம்.

முத்தின் சிவிகைபெற்ற பெருமையன பெருநெறி பற்றுந் தக்கோய்!

நின் அருளுளல், இக் கலைமன்றம் பாரிடைப் பல்லூழி பயன்படு விதத்து இலங்கிட நல்லாசி வழங்க, மண்ணிடை மறைந்தும் விண்ணிடை மறையா வியத்தகு முறையிலுலவும் எந்தமிழப்படை வேண்டுதும். வணங்குதும்.

பல்லாவரம்,
தி. வ. ஆண்டு, ௧௯௯௩
ஆனி ௨௮
12—7—1962.

ஆவியுலகுறை தமிழ்ப்படைப் பணியாள்,
மு. கதிரேசச் செட்டி,
தாமறி செல்லை இயக்குநர்வழி வரைந்தவன்

உயர்திரு. பக்தவத்சலம் அவர்களுக்கு அனுப்பப்பட்ட விருப்புரை :—

அன்பே சிவம்

மறைமலையடிகள் கலைமன்றத் திறப்பாளர்

தமிழ்நாட்டுக் கல்வி நிதி அமைச்சர்

உயர்திரு எம். பக்தவத்சலம் அவர்கட்கு

விருப்புரை

பேரறிவுடை எண்ண !

பலகலைக் கேள்வியாய்ந்து பகற்பொழு தினிதுநீக்கி, பண்ணகத்துறையுஞ் சொல்லார் நன்னலம் பருகிடும் நந்தமிழ் நாட்டின், குடியோம்பல், வன்கண்மை, நூல்வன்மை, கூடம் மடியோம்பு மாற்றலுடைமை மிக்குடைமையும், பூமகளும் வெற்றித் திருமகளும் புயத்திருப்ப : நாமகளும் கலைமகளும் நாவகத்துள் ளிருப்பச் சீர்த்தியுடையராய் அமைச்சுத் தொழிலாற்றுகை, பேர் ஆழி உலகனைத்தும் பிறங்க வளர் இருள் நீங்க, ஓராழிதனை நடத்தும் ஒண்சுடர்க் கொப்பென, கவிஞர் மதியினகன்ற எம் இளகுந் தமிழுளம் இறும்பூதெய்துகின்றது. என்றும் கலிப்பகை ஞாறுய் வாழ்க நீயெனக் குன்றுச்சீர்க் கயிலைக் கோவினை இறைஞ் சுவல்.

இளமை கழியா இன்றமிழ் எழில்புல நிறைவறி நூலோய் !

ஈட்டுமணிகள் பலதெளித்தும் எழுதற்கரிய திருவுடைப் பண்ணாளுந் தண்டமிழ்த்தாயின் குணம் நோக்கி, சூழ்நோக்கிச் சால உணர்ந்து உடம்பட்ட, உள்ளொளி பரப்பும் ஒண்டமி ழன்னையின் கிளரொளித் தனிக்குடை நிழலிற் றுயின்ற சால்புடைக் குழவியர் குழாத்திடை எண்ணாலொழியாதேத்தி வழுத்திய இன் றமிழ் இளவல்! தேங்கமழ் மலர் நறு அருந்திச் சீர்கெழு தூங்கிசை முரலும் அளியுடைத் தெய்வச் சீர்நலந் திகழும் தெள் தமிழ்த் தீஞ்சுவை மலியுந் தீந்தமிழ் நாட்டில் மொழிநலம், பிற மொழி மறைசெய, தமிழகம் இழந்த தாய்மொழி நிறைபெற முயன்று, நுட்பமார் அறிவினைத் தாங்கி, பெற்றவள் பெருமொழி கற்பான்காலைப் பொறிவழி யுள்ளம் போக்கி, பிறமொழி வெல்குவ லென்ன நெஞ்சின் விழைவுறு தமிழணி பூண்டு, தமிழ்த்துறை கைபோய், பிறமொழி மறைசெய, மறையாதாக, மாற்றுயர் வருகதிர் இரவியொத்த ஒளியுடை ஒண்டமிழ்த் தனிமொழி நந் தாய்மொழித் தமிழென, ஒல்லும் வகையெலாம், தெள்ளாரமுதத் தெளிவொத்த குயிலாய மென்மொழி கூறி, தனித்தமிழ்ப் பனுவல்கள் உண்ணிறை ஒண்டமிழ் ஒளிபரப்பயாத்து, நந்தமிழ்க்கொடிதாங்கிய ஒழுகொளி ஒண்டமிழ்க் காவலன்! மறைத்திரு மறைமலையடிகளின் பொன்றுப் புகழுடைத் தண்டமிழ்த்தாயின் இயல்நலங் காத்த கடனின்பெற்ற முணர்ந்து, சைவமும் தமிழுந் தழைக்க வாற்றிய பெருந்திறன் கண்டு புலவர்; போற்றுதல் வண்டமிழரசின் தலைக்கடனென வுன்னி, நம் தமிழக அமைச்சவை, அன்னான் வாழ்ந்த தமிழ்க்

கோயிலைப் பேணுதல் பெருவுடைப் பணியெனக் கண்டு தமிழ்த் திரு மறைமலையடிகள் நினைவுருவாய்ப் பேணிய பெருமையின் விளக்கமே! இன்று, ஓதாதுணர்ந்த முத்தமிழ் விரகன்! உயர் ஞானத் திருமொழியான்! உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானமுணர்ந்த கலைவளர் மதியாம், திருஞானசம்பந்தப் பெருமானார் வழிவழித் தோன்றலாம், தமிழ்த்திரு சோமசுந்தர ஞானசம்பந்த அடிகளாரின் அருளுளச் சிறப்பின் தலைமையில் "மறைமலையடிகள் கலைமன்ற"த் திறப்பெனத் தம் ஆண்மைத் தமிழ்க் கரம் ஆற்றுகை நீதியும் செந்தமிழ் மாருதம் எம்மருங்கிடையும் ஆலவாய் அப்பனின் அருளுமாம்.

திருவருளின் முழுநோக்கம் பெற்றேறிய நற்குடிப் பெரும!

எந்நாட்டவர்க்கும் இறையாம் கண்ணிறை நுதலோன் திருவுரு, உண்ணிறை யுயிரும் மெய்யும் உருக்கும் வண்ணம் தமிழகச் சித்திரக் கலைவாணர் வட்டித்த திருவுரு முழுமையும் இக் கலைமன்றத்தின்கண் இடம்பெற்றுத் திருவொளி திகழவும் தம் ஆழ்ந்த பேரறிவுக் கியைந்த விதத்தெலாம் கலைமன்றச் சிறப்பினை உயர்த்தி, இப் பணியாற்றத் தம் மதிமிகு அமைச்சவை சுட்டிய தென்னிந்திய சைவசித்தாந்த சங்கச் சால்புடைச் சான்றோன் திரு. வ. சுப்பையா பிள்ளையை அவ்வழி இயக்கி இறைபணிப் பொறுப்புடைத் தம் சீரிய பணியால் தென்தமிழ் நாட்டின் சீருடைக் கலைமன்ற மிதுவென, விண்ணிறை திசைகளெட்டும் விழுங்கித் தன்மயமே யாக்கும் தமிழகக் கலை நலக் கலங்கரை விளக்கம் இதுவேயெனப் பாரோர் வியப்புறும் பாங்கினில் அமைத்தல் அறிவுடை அறப்பணியாளராந் தங்கடனென எம்மார் உரைத்து உணராவிதத்து, உணர்த்தக் கலைமலிந்த தென் புலவர் கற்றோர் தம் இடர் தீர்க்குங் கலையவனுங் கைலாய அப்பனைக் கதிரேசன் புலனைந்தும் பொறிகலங்காது நெறிநின்று வேண்டுவல்.

தாய்மொழி போற்றுந் தமிழக அமைச்சவை நீடுவாழ்க!

பல்லாவரம், தி. வ. ஆண்டு, ௧௯௯௩ ஆனி ௨௮ 12—7—1962.	ஆவியுலகில் உலவும் இடைக்காலத் தமிழ்ப் புலமையாளர் குழுவின் கண்காணி, மு. கதிரேசச் செட்டி, நெல்லை இயக்குநர்வழி இயக்கியவன்.

மாண்புமிகு அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் ஆற்றிய திறப்புரையின் சுருக்கம் :

அடிகளார் அவர்களே, திரு. சுப்பையா பிள்ளை அவர்களே, பெரியோர்களே, நண்பர்களே!

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரின் பெருமுயற்சியால் அவர்கள் காட்டிவரும் அக்கறையினால் இப்பெரு விழா இன்று நடக்கிறது. அவர்கள் பல விழாக்களை நடத்தியிருக்

கின்றனர். அவற்றில் நாமும் கலந்து கொண்டிருக்கிறோம். ஆயினும் இன்று நடத்தும் விழா புனிதமான, மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு விழா.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரின் அருந் தொண்டைப் பற்றி நான் எடுத்து உரைக்க வேண்டியதில்லை. அவர்கள் உழைத்துப் பாடுபட்டுச் சைவத்தையும் தமிழையும் வளர்த்துத் தொண்டு புரிந்து வருகின்றனர். நம்மைப் போன்றவர்கட்கு அவற்றில் புதியதோர் ஊக்கத்தையும் ஏற்படுத்தி வருகிறார்கள். அவர்கள் செய்துவரும் தொண்டிற்குச் சிகரமாக விளங்குவது அவர்கள் இக்கலை மன்றத்தை நிறுவியதாகும். இது மறைமலையடிகள் நினைவாக உள்ளது; மறைமலையடிகள் வாழ்ந்த இல்லத்திலேயே ஏற்பட்டுள்ளது என்பதை உணரும்போது நமக்கு இதுவரை யில்லாத ஒரு பரவசம் ஏற்படுகிறது.

மறைமலையடிகள் ஒரு சிறந்த மேதை. பல மொழிகளில் நல்ல புலமை பெற்றிருக்கிறார். ஆங்கிலமும் நன்றாகக் கற்றார்; வடமொழியும் நன்கு பயின்றார்; தமிழிலே சிறந்த மேதையாகத் திகழ்ந்தார்; தமிழுக்கு அருந்தொண்டு செய்தார். கன்னித் தமிழின் பெருமையை மேலும் மேலும் வளர்த்து உலக முழுவதும் பரப்பினார்; தமிழ்ப் பெருமையை நிலைநாட்டினார். அரும் பல நூல்கள் வெளியிட்டார். மேலும் பல பணிகள் செய்தார். தமிழுக்கு ஒரு சோதியாகவே விளங்கினார் என்பதை அறிவீர்கள். கல்லூரி ஆசிரியராக இருந்து ஓய்வெடுத்துக் கொண்டபின் கடைசி வரை பல்லாவரத்திலேயே வாழ்ந்தார் எனில் அது பல்லாவரத்திற்கே ஒரு தனிச் சிறப்பு. இந்த இல்லத்திலேதான் வாழ்ந்தார் என்று வந்து பார்க்கும்போது ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. உலகில் எந்த நாட்டிலும் அந்தந்த நாட்டில் தோன்றிய பெரியோர்கள், சான்றோர்களின் நினைவுச் சின்னங்களைக் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்து வருகின்றனர் என்று கேள்விப் பட்டிருக்கிறீர்கள். ஆனால் நமக்கு அண்மைக் காலம்வரை போதிய அக்கறை ஏற்படவில்லை. ஆனால் சில ஆண்டுகளாக நாமும் அக்கறை செலுத்த முற்பட்டிருக்கிறோம். அது நமக்கு எதிர்காலத்தைப் பற்றி ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

மறைமலையடிகள் வாழ்ந்த இல்லத்தைச் சீர்ப்படுத்திக் கலை மன்றமாக்கி எல்லார்க்கும் பயன்படும் வண்ணம் செய்யச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் அரசாங்க உதவி பெற்றுத் தாங்களும் ஓரளவு பொருள் தந்து மிகுந்த அக்கறையுடன் முயற்சி செய்துள்ளனர் என்றால் இது போன்ற ஒரு விழாவை நாம் இதுவரை கொண்டாட வில்லை என்பதை ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்.

ஏதோ சம்பிரதாய முறையை ஒட்டியே எவ்வளவோ பெரியவர்கள் இருக்கும்போது பல நூல்கள் வெளியிட்டுப் பெருந் தொண்டாற்றிய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் நான் வந்து திறந்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். இந்த வாய்ப்பை அளித்த அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் செலுத்திக் கொள்கிறேன்.

இம் மன்றம் மிகவும் நன்ருக நடைபெறும் கலை மன்றமாக அமைந்திருக்கும். திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் எதிர்பார்ப்பது போல் சிறந்த வகையில் விளங்க வேண்டும். தமிழின்பத்தைக் கலையின்பத்தை எல்லோரும் அனுபவிக்கும் வகையில் இம் மன்றம் விளங்கும்படி செய்வது நம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்பும் ஆகும். இவ்வகையில் மக்களும் பணி செய்யக் கடமைப் பட்டவர்கள். அரசாங்கமும் எத்தகைய உதவி, ஆதரவு அளிக்கக்கூடும் என்பதைப் பற்றித் தயங்காமல் கவனம் செலுத்தும்.

நமக்கு ஒரு பலவீனம் உள்ளது. அவர் செய்வார் இவர் செய்வார் என்று விட்டு விடுகிறோம். ஆனால் அவ்வாறின்றி எல்லோரும் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும்.

இப்போது நான் தவிர்க்கக்கூடாத வகையில் வேறோரிடத்திற்குப் போக வேண்டியிருப்பதால் உங்கள் மன்னிப்பைக் கோருகிறேன். அதனுல்தான் முதலிலேயே சில வார்த்தைகள் பேச முற்பட்டேன். இவ்விழா முழுதும் முடியும் வரை இருக்க முடியாது போனமைக்காக வருந்துகிறேன். இப்போதே விடைபெற்றுக் கொள்வதற்கு மன்னிப்பை வேண்டுகிறேன். இதில் கலந்து கொள்ளும் அரிய பெரிய வாய்ப்பை அளித்தும், இங்குள்ள பெரியோரின் ஆசியுரைகளை வழங்குவதோடு, இவ்வுலகத்திற்கும் அப்பாலுள்ள அன்பர்களின் ஆசியுரைகளையும் வழங்கச் செய்த பேரன்புடைமைக்கு என் வணக்கமும் நன்றியும் உரியன. இன்று மன்றம் எவ்வளவு விமரிசையாக நடைபெறுகிறதோ அதற்கேற்றவாறு சீரும் சிறப்புடனும் விளங்க வேண்டுமென்று பிரார்த்திக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

படத்திறப்பு

விழாத்தலைவர் அருட்டிரு சோமசுந்தர ஞானசம்பந்த அடிகளார் மறைமலையடிகளின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்து உரையாற்றினர் :

"மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணின்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணின்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

மெய்யன்பர்களே,

எல்லாம் வல்ல எம்பெருமான் இன்னருளால் இங்கே கலை மன்றம் நமது மாநிலக் கல்வி நிதி அமைச்சர் பக்தவத்சலம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு அவர்கள் திறப்புரை செய்யக் கேட்டீர்கள்.

மறைமலையடிகள் 1950ஆம் ஆண்டு இம் மண்ணுலகைவிட்டு விண்ணுலகு சென்றபின் அங்கிருந்து தம் உள்ளத்தை—தம் இல்லத்தைக் கலைமன்றமாக்க வேண்டும் என்ற விருப்பத்தை - அறிவுறுத்த, அவருடைய விருப்பப்படி இஃது இன்று கலை மன்றமாகத் திகழ்கிறது.

இறந்தவர்கள் உயிரோடிருப்பவர்கள் மூலம் அறிவுறுத்துவது சிலருக்கு ஐயப்பாடாயிருக்கும். மறைமலையடிகளே மரணத்தின் பின் மனிதர்க்குண்டான வாழ்வைப்பற்றி ஒரு புத்தகம் எழுதியிருக்கின்றார்கள். அந்நூல் மேலை நாட்டவரின் ஆராய்ச்சிகளைப் படித்துப் பார்த்து அவற்றின் நுட்பத்தை உணர்ந்து வெளியிட்டதாகும். அதுபோலவே நாங்களும் "இறந்தவர்கள் வாழும் நிலையும் அவர்களுடன் பேசும் முறையும்" என்ற நூலை எழுதி வெளியிட்டிருக்கிறோம். அதை வாங்கிப் படித்து இறந்தவர்களுடன் பேச விரும்பினால் பேசியும் பார்க்கலாம். பலர் படித்துப்பார்த்து அவ்வாறு பேசியும் வருகின்றனர்.

நாம் இறந்தவர்கள் எவ்வாறு வாழ்கின்றார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இறந்தவர்களின் வாழ்க்கையைப் பற்றிப் பலப்பல சான்றுகள் சொல்ல முடியுமாயினும், காலத்தை அனுசரித்துச் சுருக்கமாகச் சொல்வோம்.

இறந்த பிறகு உடல் இன்னது என்று யாரும் ஐயமின்றி அறிவர். உயிருள்ள உடல் பகலில் இயங்குவதை அறிவோம். கனவில் வேறோருடம்பு எல்லாத் தொழிலையும் செய்வதை அனுபவத்தில் காண்கிறோம். மேனாட்டினர் கனவில் வரும் நிகழ்ச்சி மனநிகழ்ச்சியே என்றும், உடலின் தொழிற்பாடு அன்று என்றும் கருதி அவ்வாறே எழுதிக் கொண்டும் வருகின்றார்கள். அவர்கள் உண்மை யறியுமாறு செய்யவேண்டும். அதற்கு முன் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

நம் ஒவ்வொருவருக்கும் ஐந்து உடல்கள் உள்ளன. என்று சாத்திரங்கள் கூறுகின்றன. நாம் பார்க்கும் உடல் தூல உடல். மற்ற உடல்கள் எல்லாம் கண்ணால் காணமுடியாதவை. அவற்றுள் சூக்கும உடல்தான் கனவில் தொழிற்படும் உடல் என்று நம் நாட்டறிஞர்கள் நிரூபித்துள்ளனர். தூலவுடலுக்கு ஐந்து ஞானேந்திரியங்களும், ஐந்து கன்மேந்திரியங்களும் இருப்பது போலவே சூக்கும உடலுக்கும் உண்டு. சூக்கும உடலைத் தன்மாத்திரை என்றும் கூறுவர். அதை அகஞானேந்திரியம் என்ற பெயரால் நாம் குறிப்பிடுவோம். அதற்கு அகக்கன்மேந்திரியமும், தசவாயுவும் மனம் புத்தி சித்தம் அகங்காரங்களும் உயிரும் உண்டு.

சூக்கும சரீரத்தை யாதனா சரீரம், பிராணமய கோசம், ஆவி என்றும் அழைப்பர். ஆங்கிலம்படித்த பலர் ஆவி என்பதற்கு உயிர் என்று தவறாகப் பொருள்கொண்டனர். ஆனால் உயிருக்கு உடலோ பெயரோ அந்தக்கரணங்களோ இல்லை. உடல் முழுவதும் வியாபித்து நிற்பதே உயிர். உயிருக்கு ஆண் பெண் என்ற வேறுபாடுமில்லை. ஆனால், ஆவி உடலில் அவயவ வேறுபாடு உண்டு. ஆவியுடம்பு தான் உண்மையான உடம்பு. அதை நமக்கு வழங்கியவன் ஆண்டவன். இவ்வுலகில் வாழும் வாழ்வு சிறை வாழ்வு போன்றது. உடம்பு சிறைக்கூடு போன்றது. ஆனால் கனவுடம்பை எதனாலும் அழிக்கமுடியாது.

சிலர் தற்கொலை செய்து கொண்டால் கவலையின்றி வாழலாம் என்று கருதுவர். ஆனால் தற்கொலை செய்து கொள்வதால் மேலே நாம் போட்டுக்கொள்ளும் சட்டையைக் கழற்றி விடுவது போல இப்பருவுடம்பைக் கழிக்கலாகுமே யன்றி உயிரிருக்கும் உடம்பை ஒன்றும் செய்யமுடியாது. இவ்வுலகில் வாழ்தற்கு உரிய காலம் வரை அவர்கள் பேயாகத்திரிகின்றனர்.

ஆவியுலகில் வாழ்வோர்க்குப் பூலோக நிகழ்ச்சிகள் எல்லாம் நினைவில் இருக்கும். அதற்கு எம் நூலில் இருபத்தொரு சான்றுகள் காட்டியிருக்கிறோம். ஆராய்ச்சி செய்து பாருங்கள். பார்த்தால் நம்முடைய வாழ்வு குறைவானது என்ற உணர்ச்சி நமக்கு வராமல் போகாது.

ஆவியுலகில் உறைவோர் நினைத்தபோது இவ்வுலகிற்கு வருகின்றனர்; வேண்டியவரைப் பார்த்து மகிழ்கின்றனர் அல்லது அவர்கள் செய்யும் செயல்களைக் கண்டு வருந்துகின்றனர். அவர்களைப் போலவே ஆண்டவனும் கண்ணுக்குத் தெரியா உருவிலிருந்து நம்மை ஆண்டுவருகிறான். நாம் வழிபட்டால் அவ்வழிபாட்டை ஏற்றுக்கொள்கிறான்.

[அப்போது மேடைக்கு வந்த மாண்புமிகு நீதிபதி திரு. ஆவுடைநாயகம் பிள்ளையைப் பார்த்து,] இவர்கள் ஆவியுடன் பேசியிருக்கிறார். 1957இல் பிரிந்த தம் மனைவியுடன் பேசியிருக்கிறார். இவரோடு வந்த இவர் மகளும் இறந்துபோன அன்னையோடு பேசியிருக்கின்றார்.

1874 முதல் 1917 வரை இறந்தவர்களுடன் பேசிய பத்தொன்பது நிகழ்ச்சிகளடங்கிய ஒரு புத்தகம் மதுரை ஆதீன மடத்தில் உள்ளது. அதிலிருந்து இவரும் இவர் மகளும் பல மேற்கோள்களைப் படித்தனர். பின்னர் ஆவியுடன் பேசிப்பார்த்தனர். பிறகு நான்கு பக்கத்தில் ஒரு நீண்ட கடிதம் எழுதியனுப்பினார். அதில் கடைசியாக "என் மனைவி இறந்த துக்கம் என்னைவிட்டு அறவே நீங்கிவிட்டது" என்று எழுதி யிருந்தார். ('ஆமாம்' என்று கூறினார் அருகிலமர்ந்திருந்த நீதிபதியவர்கள்.)

ஆண்டவன் நம் ஒவ்வொருவருக்கும் இரண்டு உடல்களைக் கொடுத்திருக்கிறான். இந்த உடல் போனாலும் அடுத்த உடலில் வாழும்படி செய்திருக்கிறான்; மார்ச் தேர்வில் தோற்றவர்கள் அக்டோபரில் தேறலாம் என்று விதித்திருப்பது போல இவ்வுலகில் ஒழுக்கமாக இல்லாது போயினும், ஆவியுலகில் போய்ச் சில பாடங்கள் படித்துச் சீர்திருந்தக்கூடும் என்று ஆண்டவன் வைத்திருக்கிறான். இவ்வாறு ஆண்டவன் செய்திருப்பது மிகவும் வியப்பாயிருக்கிறது. இவை யெல்லாம் புதிர்போல உங்களுக்குத் தோன்றும். ஆனால் இவை எல்லாம் அறியாது போனால் நம்மை நாமே அறியாதவராவோம். தம்மை யுணர்ந்தால்தான் தலைவனை உணர முடியும்.

உலகில் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய வேலை அவரவர் முன்செய்த வினையின் பயனால் அமைந்தது. இவ்வுலக நீதிபதிகள் போலவே மேலுலகில் நம்மைக் கண்காணித்து வரும் இறைவன் தீர்ப்புச் செய்ய விரும்புகிறான். அதனால் நல்ல காரியங்கள் செய்யவேண்டும். தீயவற்றிலிருந்து விலகவேண்டும் என்ற துணிவு நமக்குப் பிறக்கிறது. அவ்வுணர்வு இவ்வுலகில் உண்டாகாமல் போனால் அருள் உலகில் உண்டாகும். அருளுலகில்லாவிடில் இருளுலகுதான் நமக்குக் கிடைக்கும்.

திருக்குறளில் இருளுலகு பேசப்பட்டிருக்கிறது. இவ்வுண்மைகளை யறிந்தால் பத்தியில்லாதவர்க்குப் பக்தி உண்டாகும். பத்தி உள்ளவர்க்கு அது ஒன்றுக்கு நூறாகப் பெருகும். எந்தப் படத்தை வைத்து வழிபட்டாலும், அந்தப் படத்திற்கு உரிய அதிபதி நம்மைப் பார்த்துக் கொண்டும், நாம் சொல்வதைக் கேட்டுக் கொண்டும் நமக்கு உபகாரம் செய்து கொண்

டும் வருகிறார். இறந்துபோன தந்தையாருக்குப் பிரசாதம் படைத்தால் அவர் அதை ஏற்றுக் கொள்கிறார். ஏற்றுக்கொண்ட தாகக் கூறியிருக்கும் சான்றும் எம்மிடம் உண்டு. பிரசாதம் என்ன சுவை உடையது என்றும் கூறுகிறார். இதை அனுபவத்தில் பார்க்கலாம். எனவே எல்லோர்க்கும் அப்பனுக்கப்பனா யிருக்கும் ஆண்டவன் நாம் படைப்பதையெல்லாம் ஏற்றுக் கொள்வார் என்பதில் ஐயமில்லை.

திரு. சுப்பையாபிள்ளை யவர்கள் ஏதோ பொருள் திரட்டு வதற்காக இப்படிச் செய்கிறார் என்று தவறாகச் சொல்லுவோர் இருக்கலாம். அவர்கள் எல்லாம் உண்மையறியாதவர்களே. அவருக்குக்கூட இதைப் பற்றி முன்பு அவ்வளவாக நம்பிக்கை யில்லை. அவருக்குத் தனியனுபவம் வந்து அவரே அதன்படி நடந்து பார்த்த பிறகுதான், மறைமலையடிகள் தம் உள்ளே நின்று ஊக்குவதையும் அவர் சொல்லுவதெல்லாம் நடந்தேறி வருவதையும் அனுபவத்தில் கண்டு அதன்படி நடந்து வருகிறார். அவர் ஒன்றும் அறியாமல் செய்யவில்லை.

சைவசித்தாந்த சங்கம் மறைமலையடிகள் ஞாபகமாக அவர் வாழ்ந்த இல்லத்தை மன்றமாக்கியிருப்பது மிகவும் பொருத்த மானது. இதெல்லாம் ஆண்டவனின் சித்தப்படி நடப்பது. மறைமலையடிகள் நடராசப் பெருமானை எந்த உருக்கத்தோடு வழிபட்டிருப்பாரோ அந்த உருக்கம்தான் இவ்வாறு பலரும் அவரைப் போற்றும்படி செய்துள்ளது. எவனொருவன் ஆண்ட வனை உண்மையாகப் போற்றுகிறானோ அவனை உலகத்தார் எல்லாம் வணங்கும்படி செய்கிறான் ஆண்டவன். “சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க” என்று மணிவாசகப் பெருமானும் உணர்த்தியிருக்கிறார். எனவே இவர்கள் கலைமன்ற மாக்கியதும், அதை மந்திரி யவர்கள் திறந்து வைத்ததும் எல்லாம் கடவுளின் திட்டங்களே. நேற்றுச் சாயங்காலம் நல்ல மழை பெய்தது. இன்று சரியான மழை பெய்திருந்தால் இந்த விழா எப்படி நடந்திருக்கும்?* அதுவும் திருவருட்செயலே. ஆதலால் ஆண்டவன் திருவருள் கலைமன்றத்திற்கு நிறைய உண்டு. பல்லா வரமே சீருடனும் சிறப்புடனும் ஒரு பெயர்பெற்ற நகரமாக வருவதற்கு இஃது ஒரு சான்றாகும். பெரியோர் வாழ்ந்த இடம் ஒரு குடிசையாக இருந்தாலும் அதை மக்கள் எல்லாரும் போற்றுவார்கள். இன்னும் அடிகளின் சிறப்பு இறைவன் உள்நின்று உணர்த்த வெளிப்படும்.

---

* அன்று மழை பெய்தற்கான குறிகள் நிரம்பத் தோன்றினவேனும் அவை பின்னர் மறைந்து விட்டன. விழா நடந்த மறுநாள் மாலையிலும் நல்ல மழை பெய்தது. விழாநாளில் மட்டும் மழை பெய்யாதது திரு வருட் செயலென்று அறியத் தக்கது.

பேலூரில் இராமகிருஷ்ணருக்கு ஆறு இலட்சம் ரூபாவில் ஒரு மடம் அமைந்திருக்கிறது. நாங்கள் அதைச் சென்று பார்த்திருக்கிறோம். இத்தனை காலமாக ஓர் இந்தியனாவது அதற்கு ஒரு காசு தரவில்லை. ஆனால் அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு பெண்மணி ஆறு இலட்சமும் கொடுத்து அங்கேயே தங்கியும் இருக்கிறார். இறைவன் யாருடைய உள்ளத்தை எந்த நேரத்தில் எவ்வாறு அசைவிப்பான் என்று யார் கண்டது? இந்த அரசாங்கம்தான் ரூ. 35,000 கொடுக்கும் என்று இவர் கனவு கண்டிருப்பாரா? எனவே திருவருள் உணர்த்தி மறைமலையடிகளும் அவருடைய கூட்டத்தாரும் உணர்த்த இக்கலைமன்றம் அமைந்து வருகிறது. அதனால் இக்கலை மன்றம் எல்லா நலங்களும் பெற்று மற்றவற்றிற்கெல்லாம் எடுத்துக்காட்டாய்ச் சிறந்ததொரு மன்றமாய் அமையவேண்டும். அதற்கு எல்லாம் வல்ல கூத்தப்பெருமான் அருள்பாலிக்கவேண்டும். இப்பணியில் பங்குபெற்ற எல்லோர்க்கும் எல்லா நலங்களும் அடைவனவாகுக! சைவசித்தாந்த சங்கம் இன்னும் பல பணிபுரிக. திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்களும் மற்றவர்களும் எல்லா நலமும் பெற்று வாழ்க!''

அடிகளாரின் தலைமையுரைக்குப் பின்பு திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் 27-1-62இல் ஆவியுலகத்திலிருந்து மறைத்திரு மறைமலையடிகளார் எழுதிய கடிதத்தினின்று கீழ்வரும் குறிப்பைப் படித்துக் கூறினார்.

“கரவாடும் வன்னெஞ்சர்க்கரியானைக் கரவார்பால் விரவாடும் பெருமானை வேண்டுவம். மண்ணிடை வாழ்ந்த மறைமலையடிகள் அம்மை அம்பலவாணனை இறைஞ்சி மலர் தூவி ஐம்புலனும் அகத்தடக்கி ஐந்தெழுத்தோதியமை அன்னவன் அஞ்செவி சிறப்புறத் திளைப்பில் நம்மைக் கைவிடான்.”

டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார் உரை

அடுத்துப் பேசிய டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் எம். ஏ., பி. எச். டி., எம். எல். சி., அவர்களின் உரை வருமாறு:

“பேரன்பும் பேரருளும் வாய்ந்த தலைவரவர்கட்கும், இங்குக் கூடியிருக்கும் பெரியோர்கட்கும் நண்பர்கட்கும் முதற்கண் என் வணக்கத்தையும் அன்பினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைமலையடிகள் வாழ்ந்த இல்லத்தின்கண்ணேயே அவர் நினைவின் அறிகுறியாக இக்கட்டிடம் விலைக்கு வாங்கப்பட்டு ஒரு கலைக்கூடம் அமைக்கப்படுவது குறித்து மகிழ்கின்ற பலருள்

யானும் ஒருவன். அவர்கள் விருப்பாவணத்திற் கண்டபடி இக் கட்டிடம் விலைக்குப் போகவேண்டும் என்பதுதான் கருத்து. இதனை நல்ல விலைக்கு விற்று அதிலிருந்து வரும் பணத்தை இன்னின்னவாறு செலவிடவேண்டும் என்று அவரே எழுதி வைத்திருக்கிறார். இக்கட்டிடம் விலைமதிப்பு இல்லாததாயினும், நாற்பதாயிரம் ரூபா என்பது நல்லவிலையே. தனிப்பட்டவர்கள் வாங்கித் தம் மனம்போனபடி பயன்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக மறைமலையடிகளின் பெயரிலேயே மன்றம் நிறுவ வல்லவர்கள் விலைக்கு வாங்கியது மிகவும் பொருத்தமாகும்.

அடிகளாரின் மாளிகையை நினைவுமன்றமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டவர்களுள் நானும் ஒருவன். அவ்வாறு கேட்டுக் கொண்டதனால் இந்திய அரசும் தமிழ் நாட்டு அரசாங்கமும் தங்களால் இயன்ற அளவு என்று சொல்ல முடியாது போயினும், மனமுவந்து ஓரளவு கொடுக்க முன்வந்தார்கள். கொடுத்த தொகை எதுவாயினும் அவர்கள் உள்ளத்தைப் பாராட்டவேண்டும்.

அரசாங்கம் இன்னும் கொடுத்திருக்க முடியும் என்று நினைப்பவர் இருப்பினும், கொடுத்திருக்கின்ற அளவில் இரு அரசாங்கங்களையும் போற்றவேண்டிய கடமை உடையவராய் இருக்கிறோம். நாம் நன்றியுடையவராயிருக்கின்றமையின் மறுமுறையும் ஏதாவது பெருந்தொகை வேண்டும் என்று கேட்டால் கொடுக்கத் தயாராயிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

சேக்ஸ்பியர் பிறந்து உறைந்திருந்த Stratford-upon Avon என்னும் இடத்தில் ஒரு பெரிய நகரமே உண்டாகிவிட்டது. அது ஆற்றங்கரையில் உள்ளது. அதில் நுழைந்தால் கண்டவிடமெல்லாம் சேக்ஸ்பியர் செய்திகளைக் காணக்கூடியதாயுள்ளது. அவர் மகள் இருந்த வீடு இது, அவர் வாழ்ந்த வீடு இது, அவர் படுக்குமிடம் இது, அவர் காலத்தில் கையாளப்பட்ட சட்டுவம் இது, கரண்டி இது என்று பல பண்டங்களை வைத்துக் காட்டுகின்றனர் மறைமலையடிகள் கையாண்ட பொருள்கள் கிடைக்காது போயினும், அவற்றைப்போல மாதிரிகள் (Models) செய்து வைப்பது நல்லது என்று கூற விரும்புகிறேன். சேக்ஸ்பியர் காலத்தில் கையாண்ட பொருள்களைக்கூட அங்கே காட்சிப் பொருளாக வைத்திருக்கின்றனர். அதைப்போல ஒவ்வொரு தேசத்திலும் வைத்திருக்கின்றனர். எடின்பரோவில் வால்டர் ஸ்காட் உறைந்த இல்லமும் இதேபோல வைக்கப்பட்டிருக்கிறது. மாஸ்கோவில் டால்ஸ்டாயின் வீட்டை அறையறையாக வைத்திருக்கின்றனர். அவர் அணிந்துவந்த பலவகையான பூட்சுகள் (Boots) வைத்திருந்த இடங்களைத் தனித்தனியே காட்டினர்.

அவருடைய குழந்தைகளின் சைக்கிள் வண்டிகளையும் அவை முறிந்து போயிருந்தாலும், அப்படியே வைத்திருக்கின்றனர். அதேபோல இக்கலைக்கூடம் காண்பதற்கினியதாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன். மறைமலையடிகளின் நூல்கள் சில வற்றைக் கண்ணாடிப் பேழைகளில் வைத்தமைப்பது நல்லது என்று நினைக்கிறேன். ஓர் ஆள் அவற்றை—பைபிளைக் கிறித் தவர்கள் காட்டுவதுபோல—ஒவ்வொரு நாளும் விரித்து வைக்க லாம். அவர் கையாண்ட திருவாசகம், திருக்குறள் முதலிய ஒரு சில நூல்களை இங்கு வந்து காண்போரனைவரும் பார்க்கும் படி வைக்க வேண்டும் என விரும்புகிறேன். நாளடைவில் சென்னைக்கு வருவோரெல்லாம் மறைமலையடிகள் கலைமன்றத் தைப் பார்ப்பதைக் கடமையாகக் கொள்வர் என்று எதிர் பார்க்கலாம்.

மறைமலையடிகள் இசை நாடகம் முதலியவற்றை வளர்த் தவர். பிறமொழியில் உள்ளதை அழகுற மொழிபெயர்க்க முடியும் என்பதற்கு அவருடைய சாகுந்தல மொழிபெயர்ப்புச் சிறந்த எடுத்துக்காட்டாகும். முல்லைப் பாட்டாராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி போன்ற பல ஆராய்ச்சி நூல்களை எழுதியிருக்கின்றார். ஞானசாகரம் (Ocean of wisdom) என்ற பெயரில் பத்திரிகையைத் தமிழில் நடத்தியும், Oriental mystic myna என்ற பெயரில் ஓர் ஆங்கிலப்பத்திரிகை நடத்தி யும் தமிழிலக்கியச் செய்திகளை வாரி வழங்கினார். இயல் தமிழுக்கு அவர் நூல்களனைத்துமே எடுத்துக் காட்டாகத் திகழ் கின்றன. மறைமலையடிகளின் கவிதை சங்கப்புலவர் பாடிய பாடல்போல் உள்ளதே என்று பலர் மருள்வர். அவ்வாறு அவரு டைய பாட்டின்நடை இலங்குகிறது. பிறரால் செய்ய முடியாத ஒன்றைச் செய்தார் என்ற பெருமை அவருக்கு உரியது.

மறைமலையடிகளின் தனித்தமிழ் நடையை Puritan style என்றும், அதனால் தமிழே பாழாயிற்று என்றும் உளறியோரின் கூற்றுப் பொய்க்கூற்றே. இந்திய ஒருமைப்பாடு என்பது எல்லா மொழிகளுக்கும் உரிய சலுகைகளை, உரிமைகளைக் கொடுப்ப தனால்தான் நிலைபெறும் என்பதே உண்மையாக ஒருமைப்பாட் டில் விருப்பமுள்ளவரின் கருத்தாகும் என்பதை யானறிவேன். பல மொழிகளையும் அழித்துவிட்டு ஒரு மொழியை மட்டும் வளர்க்க வேண்டும் என்பதற்கு எதிர்ப்புச் செய்யத் தமிழ் நாட் டில் மட்டுமின்றி மற்ற மாநிலங்களிலும் ஆயிரக்கணக்கானவர் இருக்கின்றனர். இந்தியத்தேசிய ஒருமைப்பாடு எதனடிப்படை யில் வளரவேண்டும் என்றால் நேசமனப்பான்மையின் அடிப் படையில் வளரவேண்டும். நாமனைவரும் உடன்பிறந்தவர்கள்

என்ற ஒருமைப்பாட்டுணர்ச்சியில்தான் அது வளரமுடியும். அஃதல்லாமல் உன் மொழி தீது, உன் மொழி இதுவரையில் தான் வரவேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கப்படுமேயானால் அப்போது அந்தத் தேசிய ஒருமைப்பாடு வலுவுடையதாகாது. டாக்டர் ராதாகிருஷ்ணன், ஹுமாயூன் கபீர் இவ்வாறு விரும்புபவர்களே. அவர்கள் உண்மையாகத் தேசிய ஒருமைப்பாடு ஏற்படவேண்டும் என்று விரும்புபவர்கள். பிறமொழிகளை, பண்புகளை, சிறப்பியல்புகளை அழிக்காமல், பிறமொழியினத்தாரின் உரிமைகளைப் பறித்துக் கொள்ளாமல் நாம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கவேண்டும் என்ற விருப்பமுடையவர்கள்.

இதற்கு மாறாகத் தமிழ்ப்பாட நூல்களில் ஜலம் என்பதற்குப் பதில் தண்ணீர் என்று வந்து விட்டதால் தேசிய ஒருமைப்பாடு போய்விட்டது என்று கூக்குரலிடும் கூட்டத்தாரைக் கண்டு நான் அஞ்சுகிறேன். தமிழகத்திலுள்ள அண்ணன்மாரையும் தம்பிமாரையும் தொலைத்துத்தான் அது உருவாக்கப்படவேண்டும் என்றால் ஆகட்டும் பார்க்கலாம். ஆனால் உண்மைத் தேசிய ஒருமைப்பாடு ஜலம் என்ற சொல்லையோ பானி என்ற சொல்லையோ கட்டாயப்படுத்தி வழங்கச் செய்வதால் மட்டும் உண்டாகிவிடமாட்டாது. இந்தியத் தேசீய ஒருமைப்பாடு என்பது தமிழ்நாட்டில் நீர் என்றும், மலையாளத்தில் வெள்ளம் என்றும், பானி என்று இந்தி பேசும் பகுதிகளிலும், இன்னும் வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு பெயர்களிலும் வழங்கும்படி விடப்படும் வரைதான் பாதுகாக்கப்பட முடியும். இதனை உண்மைத் தேசிய ஒருமைப்பாட்டை விரும்புபவர்கள் உணர்ந்திருக்கின்றனர். எனவே ஜலம் என்று இல்லாத பாடநூல்களை ஒப்புக்கொள்ளாது போனதன் காரணம் என்னவென்று எனக்குப் புலப்படவில்லை.

இருபத்தைந்து அல்லது முப்பதாண்டுகட்கு முன்பு தமிழகத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து விழுக்காட்டுக்குமேல் கலந்து பாடநூல்கள் எழுதப்பட்டன. அவற்றைக் களைந்துவிட்டு முழுமையும் தமிழ்ச்சொற்கள் இருக்க வேண்டுமென வழிகாட்டியவர் மறைமலையடிகளாவர். அந்தவகையில்தான் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகமும் சிறந்த வகையில் தொண்டாற்றி வந்திருக்கிறது; இனியும் வரும்.

பாடநூல்களில் தமிழ் என்று வரக்கூடாதா? தமிழ் நாடு என்று வரக்கூடாதா? வந்தால் தப்பா என்று கூடக் கல்வியமைச்சர் கூறியிருக்கிறார். தேசீயக்கவி நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை,

"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு"

என்று பாடினாரே அவர் தேசியக்கவிஞரல்லாது யார்? அந்தப் பாட்டு பாடப்புத்தகத்தில் வந்ததனால் அதைக் கிழித்து எறிந்து விட வேண்டுமா? "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என்றாரே பாரதியார். அப்பாட்டைப் பாடப்புத்தகங்களில் போடவிட மாட்டோம் என்று பிரிட்டீசு அரசாங்கத்தார் சொல்லிக் கொண்டிருந்தனர். உரிமைபெற்ற இந்தியாவிலும் அதே நிலையா?

"செந்தமிழ் நாடென்ற போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்றார் பாரதியார். தொல்காப்பியர் காலந்தொட்டுத் தமிழகம், தமிழக வரைப்பு, தமிழ்நாடு, செந்தமிழ்நாடு என்றெல்லாம் பேசப்பட்டு வந்த புத்தகங்களை யெல்லாம் பாடமாக வைக்காமல் எப்படியிருக்க முடியும்? சங்க இலக்கியங்களைப் படிக்காமல் நாம் வேறு எந்தப் புத்தகங்களைப் படிக்க முடியும்? ஆதலின் தேசிய ஒருமைப்பாடு என்பது இது தான்என்று சிலர் தப்பாக எண்ணிவிட்டனர்.

பதினைந்தாண்டுகட்கு முன்பு தமிழ்ப்பாடப்புத்தகம் இருந்த நிலையும் இப்போது தமிழ்ப்பாடப் புத்தகம் இருக்கும் நிலையும் பார்த்தால், இந்த வேறுபாட்டை இப்போது மறைமலையடிகள் இருந்தால் கட்டாயம் எடுத்துக் காட்டியிருப்பார். பதினைந் தாண்டுகட்கு முன்பு தேர் என்ற படம் போட்டிருக்கும். படத் தைப் பார்த்ததும் தேர் என்று குழந்தை சொல்லிவிடும். ஆனால் தேர் என்று சொல்லாதே, ரதம் என்று சொல் என்று மாறுபடச் சொல்லிக் கொடுத்தனர். ஆனால் இக்காலத்தில் தேர் என்றே எழுதப்படவேண்டுமென அரசாங்கத்தினர் கூறி யுள்ளனர்.

மறைமலையடிகள் இன்று இருந்திருந்தால் இதைத்தவிர வேறு எதையும் பேசியிருக்கமாட்டார். எனக்குத் திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள் மூலம் மேலுலகத்திலுள்ள மறைமலை யடிகளிடமிருந்து செய்தி ஒன்றும் வராதுபோயினும், நான் அவர்களிடம் தொடர்புகொள்ள முடியுமானால் கட்டாயம் தொடர்புகொண்டு இதைக் கேட்டு எல்லார்க்கும் தெரியப் படுத்துவேன்.

மறைமலையடிகள் தமிழகத்தில் தனித்தமிழ் நடையை அமைத்த காரணத்தாலே நாம் வீறுபெற்றோம். தமிழனுக்கு என்று ஒரு தனி மொழி, கலை, நாகரிகம், பண்பாடு என்று இருக்கின்றதா என்று 18, 19ஆம் நூற்றாண்டுகளில் எழுதியவர் பலர் பலர். ஆனால் தமிழனுக்கென்று தனிமொழி உண்டு, அது தனியாக இயங்கும் தன்மையது, தனியே கலை, பண்பாடு, வரலாறும் உண்டு என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதி நிறுவிய பெருமகனார் மறைமலையடிகள் ஆவர். ஆதலின் அப்பெரியாருக்கு நாம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் இக்கலைமன்றத்தைக் காண வரும்போதெல்லாம் நமக்கு இத்தகைய நினைவுகள் தோன்றாமல் போகாது.”

திரு. ச. சிவகுமாரன் எம். ஏ. உரை

அடுத்துப் பேசிய உயர் திரு. ச. சிவகுமாரன் எம். ஏ., அவர்களின் உரை வருமாறு :

“சுவாமிகளுடைய திருவடிகட்கு வணக்கம். சகோதர சகோதரிகளே, எனக்குத் தனித்தமிழில் மிக ஆர்வமுண்டு. ஆனால் பேசும் பொழுது தனித்தமிழாக வருவதில்லை. காரணம், பழக்கமில்லை.

என்னுள்ளத்தில் சில கருத்துக்கள் தோன்றுகின்றன. உடம்பை நன்றாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் பிறருக்கு உழைக்கமுடியும். பொதுவாக என் தகப்பனார் உதாரணத்திலிருந்து சொல்கிறேன். தமிழ் நாட்டில் சைவத்திற்கும் தமிழுக்கும் பாடுபடுபவர்கட்குப் போதிய வசதியும் பாதுகாப்பும் தமிழர்கள் தருவதில்லை. சொற்பொழிவுக்குக் கூப்பிடுவார்கள்; ஆனால் மாட்டுவண்டியில் வரச் செய்வார்கள். மற்றவகையில் வருவோருக்கு நிறையச் செலவு செய்வார்கள்.

என் தந்தையார் ஆத்மபலத்தினால்தான் 75 ஆண்டுகளாகியும் நல்ல உடல்பலத்துடன் வாழ்கிறார். தமிழர்களாலோ, சைவத்தினாலோ வாழ்ந்ததாக நான் நினைக்கவில்லை. மறைமலையடிகள் அப்படியில்லை. “என்னைக் கூப்பிடச் சக்தியிருந்தால் கூப்பிடு. இல்லையேல் வேறு எவனையாவது கூப்பிடு. என்னைக் கூப்பிட்டால் இன்னின்ன வசதிகள் வேண்டும். என்னுடம்பு நன்றாயிருந்தால்தான் நான் இன்னும் பலவிடங்கட்குச் சென்று சைவத்தையும் தமிழையும் வளர்க்க முடியும்” என்பார். நான் அதை மிகவும் பாராட்டுகிறேன்.

இப்போது போக்குவரத்து வசதிகள் மிகுந்துள்ளன. ஆனால் வசதிகள் குறைந்த தம் காலத்தில் அவர் எல்லாவசதி

களும் இருந்தால்தான் வீட்டைவிட்டுக் கிளம்புவேன் என்று கூறினர். அப்போதுதான் பொதுச்சொத்தாகப் பிறருக்கு உழைக்க முடியும்.

திரு. வி. க. வின் கடைசிக் காலத்தில் அவர் சாவதற்கு இரண்டொருநாள் முன்பு அவருக்கு ஒரு மணிமண்டபம் கட்ட வேண்டும்; அதற்கு ஒப்புதல் வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர். "வேண்டாம். முற்றுப்பெருமல் போனால் அது எனக்கு இழுக்காகும்" என்றார். அதன் குறிப்பு என்ன? "தமிழர்கட்குள் நன்றியுணர்வு கிடையாது; ஒற்றுமை கிடையாது; திரு. வி. க மணிமண்டபத்துக்குப் போதிய பொருள் சேராது. அஃது எனக்கு அவமானம்'; என்று எண்ணி வேண்டாமென்றார். ஆனல் நல்ல வேளையாகச் சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் நல்லுழைப்பால் மண்டபம் கட்டிமுடிந்தது. ஆனல் அதற்கு எத்தனை காலம் ஆயிற்று என்று நினைத்துப் பாருங்கள்.

தமிழ்ப் பெரியார்களைப் பாராட்டி அவர்களுக்கு வேண்டிய வசதிகளைக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் நமக்கு இன்றியமையாதது. அதை நன்கு உணர்ந்து பிறர்க்கு வழிகாட்டித் தந்தவர் மறைமலையடிகள் என்பதை நாம் மறக்கக் கூடாது.

மூன்ருவதாகப் பணம் கொடுத்துப் புத்தகம் வாங்கும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. இரவல் வாங்கினல் திருப்பிக் கொடுப்பதில்லை. தமிழ் நாட்டில் முதல்தரமான தனி நூல்நிலையம் (Private Librany) யாரிடத்திலும் இல்லை. மேனாட்டில் நூல்கள் வாங்குவதற்கென ஒவ்வொருவரும் மாதச்சம்பளத்தில் ஒரு தொகை ஒதுக்கிவைத்து விடுவர். அவர்களைப்போலவே மறைமலையடிகள் பெருஞ்செலவில் தம் தனி நூல் நிலையத்தை மிகச் சிறந்த வகையில் தொகுத்து வைத்தார். அதை எடுத்து நன்ருகப் பாதுகாத்த பெருமை திரு. வ. சுப்பையா பிள்ளைக்கு உரியது.

இக்கலைமன்றம் தமிழ்ப்பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தமிழையும் சைவத்தையும் மிகச் சிறப்பித்துப் பெருமையடையச் செய்யும் என்று நம்புகிறேன்.

எடுத்த காரியத்தைத் திருத்தமாகச் செய்வதிலும் ஊரறியச் செய்வதிலும் எனக்குத் தெரிந்தவரை தமிழ் நாட்டில் இருவரே உள்ளனர். ஒருவர் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார். மற்றவர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள். அதனல் நன்ருகச் செய்து எல்லோர்க்கும் நன்முறையில் விளம்பரப்படுத்திப் பயன் படும்படி செய்த அவர்களுக்கு நல்ல உடல்நலமும் உளமும்

கொடுக்கவேண்டும் என இறைவனை வேண்டிக் கொள்கிறேன். நன்றி.''

அடிகளார் முடிவுரை

தலைமை தாங்கிய அடிகளார் தம் முடிவுரையிற் கூறியன:

''இதுகாறும் இரண்டு அறிஞர்கள் பேச்சைக் கேட்டீர்கள்.

தமிழர் தம் உயர்வை, பண்பை, பத்தியை உலகமெல்லாம் தெரியப்படுத்த வேண்டுமாயின் தமிழர்கள் கண்ட உண்மைகளை மற்றவர்கள் அறியுமாறு செய்ய வேண்டும். நாம் பிறமொழிகளைத் தூற்ற வேண்டியதில்லை. 'வாழ்க இப் புவனமெல்லாம்' என்று தமிழன் பாடினானே ஒழியத் தமிழ்நாடு, அல்லது இந்தியா என்றுகூடச் சொல்லவில்லை. ஆதலால் தமிழர்கள் எல்லா நாட்டவர்க்கும் நாட்டாண்மைக்காரராயிருந்து வழிகாட்ட வேண்டும். அதற்கு வேண்டிய நுட்பங்கள் எல்லாம் தமிழ் நாட்டில் உள்ளன. தமிழ்நாட்டு ஆலயவழிபாட்டு முறைகள் ஆலய அமைப்பு முறைகள் வேறெந்நாட்டிலுமில்லை.

தமிழன் பண்பாடு, நாகரிகம் இவற்றை நம் கோயில்கள் காட்டுகின்றன என்று மேனாட்டினரே நம் கோயில்களை வந்து பார்த்துவிட்டுக் கூறுகின்றனர். ''யாது மூரே யாவருங் கேளிர்'' என்று சொன்னவன் தமிழன். ஆதலால் உலகத்திலேயே ஒருமைப்பாட்டை நிலைநாட்ட வேண்டுமானால் அதற்கு அடி கோலுபவன் தமிழனே தவிர வேறு யாரும் இருக்கமுடியாது. டாக்டர் சிதம்பரநாதன் அவர்கள் அந்தக் கருத்தை உணர்ச்சி வயப்பட்டுக் கூறினார்கள். ஆண்டவனே அவரின் உள்நின்று உணர்த்தியுள்ளான். ஆண்டவன் எந்த உடம்பிலும் புகுந்து நின்று ஊக்குவான். அவர் சொன்ன கருத்துக்களையெல்லாம் பாராட்டுகிறோம்.

சிவகுமார் அவர்கள் என் சிஷ்யர். பல பணிகளில் ஈடுபட்டிருக்கிறார். ஆழ்ந்த தமிழ்ப் பற்றுடையவர். பேச்சுத்திறமை வாய்ந்தவர். பேசியபடி நடக்கக் கூடியவர். அவர் தமக்கு ஆவியுலகத்தில் நம்பிக்கை இல்லையென்றும், சந்நிதானம் நம்பிக்கையூட்டவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

எந்தப் பொருளைப்பற்றியும் தன்னனுபவம் ஏற்பட்டால் தான் அதைப்பற்றி உறுதியாகக் கூறமுடியும். டாக்டர் செட்டியார் அவர்கள் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டு நேரில் பார்த்ததைக் கூறினார். அதுபோலவே நாங்களும் அநுபவத்தில் நமக்கு இன்னொர் உடல் — ஆண்டவன் தந்த உடல் — இருக்கிறது என்கிறோம். அதற்குத்தான் பெயர் உள்ளது.

ஐம்பது ஆண்டுகட்குமுன்பு வானெலி, தொலைக்காட்சி களைப்பற்றிக் கூறியிருந்தால், கூறியவரை அறிவிலிகள் என்று இகழ்ந்திருப்பர். இன்றே அவற்றை யறியாதாரே பட்டிக்காட்டார் என்று இகழப்படுகின்றனர். ஏனெனில் அவை நிரூபணமாகி விட்டன. இன்னும் சிறிது காலத்தில் இதே நிலைமை ஆவியுலகப் பேச்சுக்கும் ஏற்படப்போகிறது.

ஆவியுலகில் வாழ்பவரின் பேச்சைக் கேட்பதற்கு மேனாட்டினர் இருவர் மெகாஃபோன் கண்டுபிடித்திருக்கின்றனர். அதைப் பெருஞ் செலவு செய்து வரவழைக்க வேண்டியிருக்கிறது. மடத்திலேயே வரவழைக்கத் திட்டமிட்டிருக்கிறோம். (Sir Arthur-Findlay) என்பவர் பதினைந்து வருடம் ஆராய்ச்சி செய்து ஆவியுலகத்தாருடன் பேசிப் பார்த்துத் தம் அனுபவங்களை Survival of the Dead Scientfically Proved என்ற நூலில் எழுதியுள்ளார். அவர் Psychic News என்ற பத்திரிகை நடத்தி வருகிறார்.

ஆவியுலகத்தைப்பற்றித் திருவிளையாடல் புராணத்தில் சான்று உண்டு. சொந்த அனுபவமும் உண்டு. இங்கே இருக்கும் நீதிபதி திரு. ஆவுடைநாயகம் பிள்ளை அவர்களும், அவர் மகளும் ஆவியுடன் பேசியிருக்கின்றனர்.

எங்களுக்கு 75 பக்கங்களில் செய்திகள் வந்துள்ளன. ஆனால் சொல்லக்கூடிய 19 செய்திகளை மட்டும் எங்கள் நூலில் குறிப்பிட்டிருக்கிறோம். இதில் பித்தலாட்டமோ நம்பிக்கை மோசமோ இருக்கிறதென்று யாரும் திரு. சுப்பையா பிள்ளை அவர்களை ஐயுற வேண்டாம். அவர்கள் உள்ளத்தில் ஒன்றும் கிடையாது. இதைப்பற்றி அவர் முன்பு நினைத்ததே கிடையாது. இயக்குநர் மூலம் அவர் இயக்கப்படுகிறார். ஒவ்வொரு மதமும் மேலுலகத்திலிருந்து இயக்கப்பட்டதனால்தான் தோன்றியது. இல்லாவிடில் மேலுலகத்தைப்பற்றி அம்மதங்கள் எப்படிப் பேசியிருக்க முடியும்?

'வானவர் மேலது நீறு'

என்றார் ஞானசம்பந்தர்.

'வானோர்க் குயர்ந்த உலகம் புகும்'

என்றார் வள்ளுவர். நீங்கள் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும். செய்யாதுபோனால் மனிதராகப் பிறந்த பயன் இருக்க முடியாது. காணாதஉடல் தொழிற்படுவது கண்டு இறைவனுக்கும் நமக்கும் உள்ள தொடர்பை உணர்ந்து கொள்ளவேண்டும்.

இறைவன் எவருக்கு எந்தநிமிடம் எவ்வுண்மையை உணர்த்த வேண்டுமென விரும்புகிறானே அதையே உணர்த்துவான். நாம்

அவனருளின்றி எதையும் உணரமுடியாது. திருவருள் செய்தால் நாமும் நூலை இயற்றியிருக்கிறோம். அந்நூலைப் படித்துப்பார்த்து ஐயமேற்பட்டால் எழுதிக் கேட்கலாம். இவ்வுண்மையை அவர் உணருமாறு ஆண்டவன் அருள்பாலிக்க வேண்டுமென்று ஆசீர்வதிக்கிறோம். விழாவினை இவ்வளவு சிறப்பாக நடத்துவித்த சைவசித்தாந்தக் கழகத்தையும் அதற்கு உறுதுணையாயிருந்த அன்பர்கள் எல்லோரையும் பாராட்டுகிறோம். இம்மன்றம் உலகத்திற்கே ஓர் எடுத்துக் காட்டாயிருக்க வேண்டுமென்று இறைவனை வழுத்துகிறோம்.

திரு. வ. சுப்பையா பிள்ளையவர்களின் நன்றியுரை:

தலைமை தாங்கிய மதுரையாதீனம் சோமசுந்தர ஞான சம்பந்த அடிகளார் இசைந்து வந்து சிறந்த கருத்துக்களைத் தெரிவித்து இம்மன்றம் மேலும் மேலும் ஓங்கவேண்டுமென வாழ்த்தியது நமக்கெல்லாம் பெரும் பாக்கியமாகும். அவர்கள் தூய எண்ணத்தால் வாழ்த்தியதால் கட்டாயம் மேலோங்கும் என்பதில் தடையில்லை. அவர்களுக்கு என் பணிவார்ந்த வணக்கத்தைச் செயற்குழுவின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று பேச்சாளராகத் திரு. ம. பொ. சி. வரவேண்டியிருந்தது. ஆனால் அவர் உடல்நலமின்றியிருப்பதால் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் பேசுவதற்கு இசைந்தார். இவருக்கும் கழகத்திற்கும் நீண்டநாள் தொடர்புண்டு. இவருக்கும், திரு. சச்சிதானந்தம் பிள்ளை யவர்களின் மகனார் திரு. சிவகுமரனார் அவர்களுக்கும் என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மன்றம் ஏற்படுவதற்குப் பொருளுதவியளித்த மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் சைவசித்தாந்த சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். மேலும் குறுகிய காலத்தில் விரைந்து செயலாற்றிய தலைமைக் கொத்தனார் செயராமன், வண்ணம் தீட்டிய கோபால், கிணற்றுத் தூர்வை எடுத்த R. S. வேலாயுதம் பிள்ளை ஆகியோர்க்கும், எங்கள் அழைப்பிற்கிணங்கி விழாவுக்குப் போந்து சிறப்புவித்த அன்பர்களுக்கும், வாழ்த்துக்கள் அனுப்பியோர்க்கும் எங்கள் நன்றி உரித்தாகும். இசைப் புலவர் திரு. த. கூத்தரசனார் வாழ்த்துப் பாடல் பாடியதொடு விழா இனிது முடிந்தது.

ஆவியுலகினின்று இயக்குநர்வழி அறிஞர் பெருமக்கள் நால்வரிடமிருந்து வரப்பெற்ற வாழ்த்துக்களைப் பின் பக்கங்களிற் காண்க.

உ

திருச்சிற்றம்பலம்

வாழ்த்துரைகள்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பெருமையை, புகழினை, கடனினைப் பாரறியப் பணி யாற்றும் கழகப் பணித்துறை ஆணையர் திரு, வ. சு. வுக்கு,

மேன்மைகொள் சைவநீதி விளங்கவந்த சேக்கிழார் சுவாமிகள் மரபிற்றோன்றிய மாண்புடை மதிமகன்! தெளிவள ருள்ளத்து ஆனந்தக் கனியாந் திருமுறை சுவைத்த திருவார் தமிழன்! அஞ்செழுத்தின் புணைபிடித் துய்ந்த திண்மையன்! திண்ணம் பிறழாது திருவருள் துய்த்த திருமகன்! சித்தஞ் சிவமாக்கிச் செய்வினையாற்றிய செம்மையன்! ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக மெய்ச்சுடர் மொய்யினைப் பாடும் பாணன்! சிவக் கருணையே நோக்கிக் கசிந்து உள்ளமுருகி எண்ணம், உடல், வாய், மூக்கொடு செவி கண் என்றிவை ஒன்றிப் பதித்துப் போற்றிப் புகழ்ந்துருகிட, ஞாலம் மகிழ்ந்து வியப்புறும் சிற்சபையாடுஞ் சிதம்பரநாதன் திருவொளி வீசும் தாண்டவப் பொருவே, ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்தருஞ் செவ்வியென, மண்ணுறைகாலைத் தம் வாழ்மனையகத்துத் திருவுரு வமைத்துப் பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பொலி கேட்டுக் களித்த சைவச்சிற்பி! ஆராப் பெருவிழைவாஞ் சிவக்காதல் வளர்ந் தோங்க உள்ளமுருகிச் செப்பற்கரிய சைவத் திருநெறி எங்கும் கிளர்ந்தொளி வீசிட, உறுபொருள் காட்டிச் செந்தமிழ்ப் பெருக் காற்றியுணர்வொளி ஊட்டிய சைவப்பரிதி! பொதியப் பொருப்பின் பிறந்து பூஞ் சந்தனக் கொங்கணைந்து குளிர் சாரலிடை வளர்ந்த பொங்கு தண்தமிழ்க் கொழுந்தென்றல் தாலாட்டத் தாய்மொழி பயின்று தெளிவாய்ந்து, தமிழ்மொழி யாட்டி வெந்துயர் களைகெனப் பன்மொழி யாய்ந்து, பரவிக் குதித்த காதலின் நெறிநின்று, சால்பாய மும்மைத் தமிழ், புறச் சார்பிலாத் தன்னுயர் ஓங்கிய ஒளியுடைத் தனிமொழியென, ஒப்புஇல் உவகைபூத்த உளப்பெருக்குடன் தமிழ்க் கடனாற்றிய சுந்தரத் தொண்டன்! சிவதத்துவப் பெருமையை மெய்யுட னுணர்த்தும் திருமொழி வாசகத்தமிழ்மறைப் பொழிலின் பேருரை யாளன்! உலகியல், அறிவியல், காலவியல், கருத்தியல் எனப் பன்னிலை யாய்ந்து தமிழர் பல்வளம் கொண்டிடப் பயனுடைத் தமிழ் நூல் பலபல யாத்த பண்டிதத் தமிழ்மலை! எத்துறை புகினும் அத்துறை நெறி நின்றுய்ந்து அறிதற்கரிதாம் உட்பொருள் விளக்கமுணர்ந்து, தாம் பெற்றபேறு தமிழர் பெற்றிட! தேனூறுந் திருவாய் முகிழ்த்து, கீதமினிய தம் தீங்குரல் ஒலித்துச் சொன்மாரி பொழிந்து கேட்கும் அவையினைத் தம் வயப்படுத்தி உணர்ச்சி யூட்டிடும் உளவியற்றலைவன்! கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த பசுந்தமிழ் மொழியின் உயர்நிலை உற்றுணர்ந்து உயர்வெய்திட அருள்வழி நின்றுழைத்துத் தமிழ் முரசு கொட்டிய தலைவன். **மறைமலையடிக ளார்க்கு**; அவரின் நினைவாய், அவர் வாழ்ந்த திருமனையாந் **தமிழ்**

இல்லத்தினையே அரசுபற்றி, மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கள் செந்தமிழ்க் குழைத்த சிறப்பின் பரிசினை உணரும் வண்ணம், கலைமன்றமாக்கிய அருஞ்செயல், அன்று திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் எந்நோக்குடன் உழைத்தல் கடனென, அறிவுடைப் பெருமக்கள் அமைத்தனரோ அந் நோக்கமாஞ் சைவத்திற்கும், தமிழ் மொழிக்கும் இடையரு துழைத்துப் பல்கால் பயன்பெறு வண்ணம் பணியாற்றலென்பது, இன்றே பெருஞ்சிறப்புடன் நிறைவின் முதற்கண் ஏத்திய தென்பதே எந் துணிபென்பதாற் றெளிக.

திருநெல்வேலி,
12—7—1962

அன்பன்,
கா. சு.
திருநெல்வேலி இயக்குநர்வழி வரைந்தவன்.

(தவத்தமிழர் மறைமலையடிகளார் கலைமன்ற நிறுவலின்போது வழங்கிய தமிழுரை)

வ்

வேலுமயிலுந் துணை

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக அமைச்சர் திரு. வ. சுப்பையா பிள்ளைக்கு விமலன் புதல்வன் வியத்தகு பேரருள் என்றும் நின்றுலவுக. தமிழ்க்கடல், சைவப் பெரு மகார் மறைமலையடிகட்கு, தம் கழகம் நினைவுச் சின்னமாய்க் கலைமன்றமமைத்த இத் திருவிழா நாளன்று இயம்பற்கு இயலா நிலையினில் அருள்வழி பற்றும் அன்பனொருவனின் திருக்கரம் பற்றி வரைந்த ஞானியாரடிகள் சிற்றுரை.

அயராவன்பின் அரன்கழல் பற்றும் சித்தாந்தச் செந்நெறி ஒளிதரும் பெருநெறி ஆய்ந்த சித்தாந்தத் திருமணி! வெவ்வினை வாழ்வை மெய்யென உகந்தார்க்கு, அவ்வினையகற்றி, மெய்யினை உணர்த்தி அரன்வழி நிற்றலே சிறப்பென அருளுடன் யாழின் மென்மொழி மொழிந்துணர்த்தும் அந்தணன்! பொறையாம் அறிவால் அரனின் அருள்நிலை களித்த அனுபூதிச் செல்வன்! வேரொடு குன்று தொளைத்த நெடுவேலருளிய நெடுந்தமிழ் கசடறக் கற்று, கன்னித் தமிழின் மென்மை வரைந்தும், உரைத்தும் விளக்கிய தமிழின் மெய்காப்பாளன்! இன்னிசை நிறைந்த செந்தமிழ், இறைமொழியென அகத்துறை விளக்கி உலகியற் பன்மொழித் தலைமொழி தாய்மொழித் தமிழெனக் கனகல் நெஞ்சமும் நெகிழ்ந்துருகச் செஞ்சொற் றனித்தமிழிசைத்து, அறிவுடைத் தமிழினம் தம் மொழிபேணலே தந்தலைக் கடனெற்றுகையென விழிப் பூட்டியுணர்த்திய தமிழ்த்தாய்த் தலைமகன்! மறைமலையடிகட்குத் தமிழின் நினைவாய் தமிழர் தம்மொழிக் காற்றுத் தலைக் கடனாய் ஆற்றிய பெரும்பணி கல்வி ஞானக் கலைப்பொருளாய ஒளிகொள்மேனி உமையவள் கூறனின் திருவருட் பேறேயெனக் களித்தோம்.

ஞானியாரடிகள்.

அன்பேசிவம்

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கச் செயலாளர் திரு. வ. சுப்பையா அவர்கள் அறிய வரைவது.

சிலம்பணிகொண்ட செஞ்சீறடிபங்கள், தன்சீரடியார் குலம் பணிகொள்ளத் தம்மைத் தமிழ்த் தொண்டனுக்கிய பெறுதற்கரிய பெரும்பேறு எம்மவரெவர்க்கும் கிட்டாததொன்ருயினும், எம் மையும் தம்மையும் மதியுடம்படுத்துக் கருத்தறி வித்தலி லிணைத்தது அவன் பேறல்லாது மற்றில்லையெனத் தெளிவுடன் அறிந்து மாசிலாமணியின் மலரடி வணங்கி, தமிழ்க் கடனாற்றுந் தொண்டராந் தமக்கும் அன்புநிறை வணக்கம். வினை நலந் துய்க்கும் வெண்தமிழ்த் தொண்ட!

அருளொடும், அன்பொடுமிடைந்த தம் மொழியாக்கம் பேணுத் தமிழகம், அவ்வழி மிகலிலாப் பிறமொழிப் புறஇயல் காண்டு, செவிக்கினிய இசையும், உள்ளினும் தீராக் களிப்பு மாமென உள்ளக்களித்தும், தம் நெஞ்சத்தெழு பிறமொழிக்காதல், பிறமொழியாளர்க்குந் தம்மொழிபால் உளவோவெனச் சற்றுஞ் சிந்தனை செய்யா விதத்து மதிபிறழ்ந்து உள்ளமுடைந்துழலுங் காலை, தம்நிலை ஓர்தலின், பைதல் உழக்குமெனத் தூண்டி; கெழுதகையால் அறிவுச் சுடர்ஒளி நல்கிய தமிழகப் பழமையர் பலருள், காலத்தினியல்பறிந்து

"தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்"

என அருளிய தெய்வ நூற்புலவர் பொய்யாமொழியின் மெய்ப் பொருள் விளக்கும், அகநிலை நற்பொருள் தமிழரறிந்திட ஊட்டி, தமிழகக்குன்ருவிளக்கம் தம் தாய்மொழித் தமிழென, வினைக்கண் கேண்மை யுடையராய்ப் போற்றி வழங்கும் நெறியினைப் புரிந்திட ஓவாதாற்றி, தமிழ்மொழி யென்றும் பிறமொழிச் சார்பிலாத் தனிப்பெரும் புகழ்மொழியென, மொழிநலம் உயிர்க்காக்குமென, இனநலஞ் சேரின் ஏமாப்புடைத்தென, இன்றமிழியம்பி, வண்டமிழ் வரைந்து முறைசெய்து நல்லாற்றின் மொழியியல் காத்த வெல்புகழ்த் தமிழர் மறைமலை யடிகள் நடுக்கறத் தான் செய்த தொல்வினைப் பயன் துய்ப்பத் துறக்கம் வேட்டுப் பிரிந்த பின், கன்று அமர்விருப்பொடு மன்றுநிறைபுகுதரும் கறவை யொத்த, தமிழ்மொழிப் புலமைக்குழவியர் பேணுந் தங்கழகப் பெருங்குழாம் அன்றுபேணிய நிலையினை நிறைசெய, மென் தமிழ்ப்புலமை முற்றிய பெருமகன் மறைமலையடிகள் மென்றமி ழார்த்த மொய்கொள் இல்லினை அப்பெருமகன் நினைவார் கலைமன்றமாக்கிய தங் கடவுறாஉம் தமிழ்க்கடன் உலகம் தழீஇய சிறப்பே!

சைவசித்தாந்தச் செந்நெறிபற்றும் சால்புடைச் சங்கச்செயல்!

சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனைச்சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல் வண்ணன்; நெஞ்சு நினைந்து வாயாற் பிரானென்று துஞ்சுபவர்க்கருளும் ஆதிப்பிரானினருளால், பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாங் காதல் சிறந்து ஆராத

அன்பினோடண்ணலை யேத்தி, சைவசித்தாந்தத் தெளிபொருள் ஆய்ந்த சைவத் தமிழ்மணிகள் பலரிருப்பினும், பூவினிற் கந்தம் பொருந்திய தன்மை, சீவனினுள்ளே சிவமணம் பூத்த சிவத் திருமணி மறைமலையடிகள், சைவசமயத் தனிநாயகன், உய்ய வருத்த தெய்வச்சிவநெறி ஈதென ஊரும் உலகுமறிந்திடத் தெளிவுடன் ஆய்முறை காட்டி, தென்னன் தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலத்து பொன்னும் மணியும் நிரந்த திருவொளியில், புலித்தோல் அரைக் கசைத்து, மின்னின் இடையாள் உமையவள் காண ஆடும் அம்பலவாணர் சேயமாமலர்ச் சேவடி பற்றி, ஆரும்பெறுத அறிவு பெற்று, அம்பலவாணரின் திருமிளிர் உருவினைத் தம் மண்ணுறை காலை வதிந்தமனையில், சீரும் திருவும் பொலிய அமைந்து ஏத்தொலி இன்றமிழ் வாசகம் பண்ணுடன் பெருக்கி, ஆவியுள் நிறுத்தியமர்ந்தூறிய அன்பினராய்த் தொழுது, சைவசித்தாந்தப் பெருநெறி, தூய தமிழ்த் திருநெறி, தணியாக் கருத்தொடு நசைஇ, தம்வாய் விடூஉம் மாஅல் தீங்குரல் பெருக்கி, இன்புற ஆற்றிய கடனின் பரிசிலாய்த் தம் கழகக் கிளையாம் சைவசித்தாந்த சங்கம் அச்சிவமணங் கமழும் திருமனையினையே பாரும் விசும்பும் அறியப் பரிசிலாய் அமைத்தமை, அந்தமில் ஆனந்தச் சேந்தன் அருட்பெருங்கருணை யியக்கிய பேறேயென, அம்முருகினருளடி பற்றி, எண்ணருஞ் சிறப்புடைத் தம் இருநெறித்தொண்டாம் சைவமுந் தமிழுமியைந்தவை என்றும் நின்று நிலவும் நிறைபெற, வழுவிலாத் தம் தாய்மொழித் தொண்டு பல்லாற்றானுஞ் சிறந்திட அருள இறைஞ்சுவல்.

என்றும் நன்றே செய்ம்மின்!

அன்பன்,

சி. வை. தாமோதரம்,

நெல்வேலி இயக்குநர்வழிக் கருத்தறிவித்தவன்

சிவமயம்

ஊழிதோறூழி உலகங்காக்கும் உமையொருபாகன் திருவருட் கருணைச் சிறப்புடைத் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக அறிவுசார் அமைச்சர் திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கட்கு,

மண்ணிடைப் பிரிந்தும், பிரிதராப் பெற்றியில், மண்ணிடைத் தம் அதிராச் சிறப்புடைத் தமிழ்ப்பணி கண்டுவந்து, அகமலி அன்பொடு ஆக்கவுரை பொங்கிட அருள்பாலித்த, கொன்றையஞ் சடைமுடிச் சங்கரன் பொருவில்சீர் உருவுடைத் திருவடி போற்றி, வணக்கம்.

மெய்வகையுணர்ந்த விழுமிய !

உருவும் குலனும், உயர்பேரொழுக்கமும், எவர்க்கென வினவின், மன்னுயிர்கட்கெலாந் தூய்மையே சாற்றி, இன்பமும் தண்மையும், வீரமும், திருநிற்குரு செம்மையும் நல்கும் உலகின் முதல்மொழியாட்டி; தேங்குவைத் தீந்தமிழ் அன்னையின் திருவுடைச்செல்வர்க்கென இறுத்தல் மிகையிலை. இயல்பென அன்றே கண்டமொழிவலர்கூறநே. முடிவிலா இன்புடைத் தமிழ்

மொழி யூட்டும் குறைவில் புகழுடைச் செந்தமிழ் அன்னையின், பழிப்பருஞ் சிறப்புடை மொழிஇயல், பின்றையோர் தம்நிலை திரிதரக் குதறுதல் கண்ட அறிவுசார் அறவழித் தமிழர்கள் மாபெரும் நவையென உள்புக்கழுத்தி அஞரெய்திய அருந்துய ரகற்ற, மெய்ம்மையின் வேறுகொளா மென்றமிழ்திரிதர ஆக்கல் தமிழர்க்கிழுக்கெனப் பல்வகைத் திறத்தொடு அறிவுகொளுத்தி; மெய்ப்பரிவு விளைத்து, ஓழிவின்றி ஆரா அன்பினின் தகைசால் தண்டமிழ் நன்மொழி மாண்புறமொழிந்து வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு தென்றிசை யாண்ட பாண்டியர் போற்றிய இறைமொழி இன்றமிழ் தீதுதீர் சிறப்புடைத் தனிமொழியெனச் சான்றுடன் தம்மியல்புடை முருந்தேர் முறுவல்கூட்டி, முல்லைத் தீம் பண்ணுடைத் தங்கிளவி பெருக்கி, தாய்மொழித் தமிழர்க்குப் பண்பும் அறிவும் ஆண்மையும் ஊட்டி, தனித்தமிழ்த் திருக்கொடி; இயற்றமிழ் எழிற்கொடி; முத்தமிழ் மணிக்கொடி, தாங்கிய ஓப்புஇல் வீரத்தமிழ்மகன்; தமிழ்க்குலம் செய்தவக் கொழுந்து; தமிழ்த் திருமாமணி மறைத்திரு மறைமலையடிகட்குப் பெருமையும் நந்தமிழ் மொழிக்குயர் சிறப்புமியைந்த பெற்றியில், அச்சீர் கொண்ட புகழ்வள்ளல் வதிந்த தமிழ்வளமார் மனையினைக் கலைக்கோயி லாக்கியதஞ் சீரிய தமிழ்க் கடன் இயம்பற் கெளிதிலை; நினையவும் அரியது. வலிதே.

களிமகிழ்வு தலைசிறக்கக் கடனாற்றுந் தூய !

தூய சிவநென்னெறி பற்றி, தந்தூய்மனையில் புயல் அடையும் மாடத்து, பொலிவுறு மலிவுடைத்தாய, திருத்தில்லை திருமன்றுள் சென்று இறைஞ்சி ஒன்றி அணைதரு தன்மை, உறுவாழ் மனையொடு பொருந்துகவெனப் பெருங்காதலுணர்வுடன் மிக்கெழுந்த சித்தமொடு, மதியார் செஞ்சடையான்; வண் கொன்றைத் தாரன்ன மின்தாழ் சடையொடு நின்றாடும் ஆனந்தக்கூத்தன் திருவுரு அம்மையுடன் அமைத்து, நாடொறும் நன்மலர்தூவி, மெய்த்த திருப்பணி யாற்றி, தேமாலைச் செந்தமிழ் வாசகம் பண்ணுடன் பாடி ஆனந்த வெள்ளத்திடை மூழ்கி, அம்பலவர் தேனுந்து மலர்ப்பதத்தமுதுண்டு, தெளிவெய்தி, நம்பெருஞ் சமயநன்னெறி வீழ்ந்ததேயெனத் துனுக்குற்றுச் சிந்தை நைந்துருகி, ஊனாலும் உயிராலும் உள்ள பயன் கொளக் களிபயின்று, உயர்தமிழ் இறையின் அளப்பருந் திருவருள் பொழியுங் கருணையினை மெய்த்தன்மையில் உலகறிந்து சைவப் பெருநெறிபற்றிட, பெருத்தெழுகாதலிடை, விரும்பி உய்யும் சைவ நன்னெறி இதுவெனக் காட்டி, செய்பணி சிறக்கவாற்றிய மெய்ப் பொருள்தேர் சைவத் திருமணி மறைமலையடிகட்கு அத்தூய் மனையிலேயே தமிழுஞ்சைவமும் மலர்ந்திட உழைத்த ஒன்றிய கடமையின் நினைவாய், கலைமன்றமமைத்தமை தம்மெய்த்தொரு பெருந்தொண்டிற்கொரு தூண்டாமணி விளக்காயமைந்தது எல்லையில் புகழாம். தந்தமிழ்ப் பணி சிறக்க தங்கழகத் தலைவர் குழுவொடு தமிழ்க் கடனாற்ற, கார்மன்னுங் கறைக்கண்டர் கழலிணைத் தொழுவோம்.

12—7—1962

ந. ரா. வேங்கடசாமி
நெல்லை இயக்குநர்வழி வளர்ந்த தமிழன்

அன்புமிகு திருவாளர் சுப்பையா பிள்ளை அவர்களே!

பல்லாவரத்தில் மறைமலையடிகள் கலைமன்றம் 1962 ஆம் ஆண்டு சூலை 12 ஆம் நாள் வியாழக்கிழமையன்று திறந்து வைக்கப்பெறும் விழாவில் கலந்துகொள்ளுவதற்காக அனுப்பப் பெற்ற அழைப்புக் கிடைக்கப்பெற்றுப் பெருமகிழ்ச்சி உற்றேன்.

மறைமலையடிகளின் நினைவுக்காகப் பலரும் அறியத்தக்க வகையில் ஒரு மன்றத்தை அமைத்திருப்பதன் மூலம் சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழகம் வருங்கால மக்களுக்கு ஒரு நல்ல தொண்டினைச் செய்திருக்கிறது.

மறைமலையடிகள் இறுதியாக வாழ்ந்த இல்லமே அம்மன்றம் அமைவதற்கான இடமாக அமைந்தது மிகப் பொருத்தமே யாகும்.

யான் கல்வியயின்ற சென்னைக் கிறித்தவக் கல்லூரியிலேயே மறைமலையடிகள் ஒரு பேராசிரியராகப் பணியாற்றினராகலின் அவருக்காக ஒரு மன்றம் அமைவதை அறிந்து மிகப் பெரிதும் களிப்புக்கொள்கிறேன்.

என்னுடைய பெருங்களிப்புக்கு இன்னொரு காரணம் தாங்கள் இலிங்கிச் செட்டித் தெருவில் மறைமலையடிகள் நூல் நிலையம் ஒன்றை அமைத்து அதனை வளம்பெறச் செய்வதில் என்னை ஈடுபடுத்தியதாகும்.

இக்காலத்தில் நம் மக்களிடையே நூலக உணர்வும், உயர் கல்வி பெற்றோரிடையே ஆராய்ச்சி உணர்வும் நாளுக்குநாள் பெருகிவருவது கண்கூடு. இதனால் நம் மாநிலத்தில் நூலக அமைப்புமுறை இன்னும் வலுப்பெற்று இயங்குவது இன்றியமை யாதது என்பது புலப்படும்.

1948 ஆம் ஆண்டிலேயே நம் நாட்டில் முதல் நூல்நிலையச் சட்டத்தை ஏற்படுத்தி அதை அரசாங்க நிலை ஆவண ஏட்டில் (Statute Book) பதிப்பித்து நூலக வரலாற்றைத் தொடங்கி வைத்த பெருமை இந்தியாவில் நம் சென்னை மாநிலத்திற்கே உரிய தாகும். இந்தச் சமுதாய நலங் கருதிய சட்டத்தைக் கொண்டு வருவதில் பணிபுரிந்த சென்னை நூலகக்குழு நம் மாநிலத்தில் பொது நூலகப்பணி எவ்வாறு வளர்ச்சியுற்று வருகிறது என்பதை ஆர்வத்துடன் கவனித்துக்கொண்டு வந்திருக்கிறது. இப்போது நம் மாநிலத்தின் நூலகங்களின் பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர் மாண்புமிகு திரு. பக்தவத்சலம் அவர்களே என்பதை யறிந்து நூலகக்குழு பெரிதும் மகிழ்கிறது. கடந்த பதினன்கு ஆண்டுகளாக வளர்ந்துவரும் நூலகப் பணியின்

அளவையும் தன்மையையும் உயர்த்தி நூலகச் சட்டம் எவ்வாறு செயல்பட்டுவருகிறது என்பதையும் ஆய்ந்தறிவதற்குப் பதினான்கு ஆண்டுக்காலம் போதிய நீண்டதொரு காலமே என்னும் சென்னை நூலகக் குழுவின் கருத்தை அவரும் ஒப்புக் கொள்வார் என்றே பெரிதும் நம்புகிறேன். நூல்நிலையச் சட்டம் போன்ற சமுதாயச் சட்டங்களைப் பொறுத்தவரை அவற்றைக் காலாகாலத்தில் தணிக்கை செய்வது உலகத்தின் எல்லா நாடுகளிலும் உள்ள ஒரு பொது வழக்கமேயாகும்.

உயர்திரு பக்தவத்சலம் அவர்கள் பொதுவாகக் கல்வியிலும் குறிப்பாக நூலகப் பணியிலும் பேரார்வமுடையவர் என்பது எல்லோருமறிந்த செய்தியே அவருடைய மாண்புறு மாமனார் திரு. முத்துரங்க முதலியார் அவர்கள் சென்னை நூலகக் குழுவின் நோக்கங்களைப் பெரிதும் போற்றி ஆதரித்தவரே. எல்லோருக்கும் இலவசமாக நூல்களைப் படிக்க வழங்குவதை உயர்குறிக்கோளாகக் கொண்டிருக்கும் நூலகக் குழுவின் முயற்சிகளுக்கு உயர்திரு பக்தவத்சலம் அவர்கள் என்றும் உறுதுணையாய் இருந்து வந்திருக்கிறார்.

நூல்களின் மூலம் அறிவைப் பரப்புவதில் அளவிலா நம்பிக்கை கொண்டு ஆராய்ச்சியின் வடிவமாகவே திகழ்ந்தவர் மறைமலையடிகள் ஆவர். அவருக்குக் கிடைத்த குறைந்த வருவாயினைக் கொண்டே தமிழ் ஆங்கிலம் வடமொழி ஆகிய மொழிகளில் உள்ள பல அறிவுத்துறைகளைப் பற்றிய ஏறக்குறைய நாலாயிரம் நூல்களை வாங்கித் தொகுத்து வைத்தார். நூற்பணியில் அவர் கொண்டிருந்த நம்பிக்கைக்கு இஃது ஓர் அளவுகோலாகும். இலிங்கிச் செட்டித் தெருவிலுள்ள நூல் நிலையத்தின் கருப்பொருளாகத் திகழ்வது மறைமலையடிகள் தொகுத்துவைத்த நூல்களின் தொகுதியே.

தமிழறிஞர்கள் அறிவொளியை மேன்மேலும் பரப்புவதற்காக அளவில்லாத வாய்ப்புக்களை யளிக்கும் ஆராய்ச்சி நிலையமாக இப்போது பல்லாவரத்தில் தொடங்கப் பெறும் மன்றம் அமையும் என்று பெரிதும் நம்புகிறேன்.

1962 ஆம் ஆண்டு சூலை 12 ஆம் நாள் கலைமன்ற விழாச் சிறப்புற நடைபெற வேண்டுமெனை வாழ்த்தும்,

தங்கள் நட்புரிமையுள்ள,
(ஒப்பம்) எஸ் ஆர். ரங்கநாதன்
பேராசிரியர்,
இந்தியப் புள்ளியியற் பயிற்சிக்கழகம்.

பெங்களூர்,
10—7—62

மறைமலையடிகள் கலைமன்றம் பல்லாவரத்தில் திறக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியது. தமிழ்த்தொண்டு புரிந்த அப்பெருந்தகையாரைத் தமிழ் கூறு நல்லுலகு என்றும் மறவாது போற்றற்கு இம்மன்றம் பொருத்தமான துணையாகும். இக் கலைமன்றத் திறப்பு விழாவுக்கு மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீன மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமை தாங்குவது குறிப்பிடற்குரியது.

நல்லறங்காவலர் தமிழ் நாட்டுக் கல்வி நிதியமைச்சர் நம் அன்பர் உயர்திரு எம். பக்தவத்சலம் அவர்கள் திறந்து வைப்பது மிகவும் பாராட்டற்குரியது.

எல்லா வகையாலும் சிறந்து விளங்கும் இக்கலை மன்றத் திறப்பு விழா இனிது நிகழ்க. இதில் பங்கு பற்றும் அன்பர்கள் அனைவரும் செந்தமிழ்ச் சொக்கர் திருவருளான் நல்லன எல்லாம் பெற்று நீடு வாழ்க.

—தருமபுர ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக
ஞான சம்பந்த பரமாசரிய சுவாமிகள்.

பேச்சிலும் மூச்சிலும் எழுத்திலும் எண்ணத்திலும் சொல்லிலும் செய்கையிலும் அனைத்திலும் தமிழாக வாழ்ந்து சிவமாகப் பழுத்தவர் மறைமலையடிகளார் ஆவார். மும்மொழிப் புலமை சான்ற அவரின் ஆய்வு நூல்கள், ஆராய்ச்சியுலகிற்கே ஒரு புதிய திருப்பத்தை அமைத்துக் கொடுத்துள்ளது. பிறமொழி பயில்வதெல்லாம் தமிழ் மொழியை வளர்ப்பதற்கே என எண்ணியவர் அவர். அவரது நெஞ்சம் உலவிய இடம் அவரது திருவடி தோய்ந்த இடம் தமிழ் மணம் பூத்துச் சைவமணம் கமழும் இடமாகும்'

—பண்டித வித்துவான் சைவப் புலவர் சித்தாந்த நன்மணி,
கு. சுந்தர மூர்த்தி, திருப்பனந்தாள்.

தமிழகத்தில் தமிழ்ப்பெரும் புலவர் ஒருவர் பெயரால் கலை மன்றம் காணும் தலைசிறந்த முதற்பேறு மறைமலையடிகளார்க்கு வாய்த்தது; அவரது புலமை, பணியாகியவற்றின் சிறப்பினாலேயேயாம். இத்தகைய நற்பணியை முன்னின்று பொ[illegible]த்தும் அற்புதப்பேறு, சைவ சித்தாந்தக் கழகத்தார்க்கும் அதன் ஆட்சியாளர்க்கும் வாய்த்தது திருவருட் பெரும் பரிசாகும்.

அடிகளார் கலைமன்றம், தமிழுலகிற்கு என்றும் ஓர் எடுத்துக் காட்டாக நின்று இலங்குவதாக !

—அ. க. நவநீத கிருட்டிணன், திருநெல்வேலி.

இந்நாளில் படர்ந்து வருவதான அன்பையும், அறத்தையும் ஒருவிய அறிவு நீங்கி, உண்மையறிவு நாட்டில் நிலவுவதற்கு வழி கோலும் தமது அரசும், ஒத்துழைத்து இக்கலைமன்றத்தை உருவாக்கிய கழகமும் பல்லாண்டு வாழ்க!

'சாவடித் தெரு' என்பதை 'மறைமலையடிகளார் தெரு' என்று மாற்ற முயல வேண்டுகிறேன்.

—தி. இராமலிங்கம், எம். ஏ., சென்னை.

மறைமலையடிகள் திருவுருவம் சென்னைக் கடற்கரையில் அறிஞர்கள் சிலைகள் திகழ்வது போலத் திகழ்வதற்குத் தமிழ் உணர்ச்சி கலையுணர்ச்சியுடையவர்கள் முன்வந்து இதற்கு ஆவன புரிய மிகவும் வேண்டிக் கொள்கிறேன்.

—பாலூர் **கண்ணப்ப முதலியார்**, M. A., B. O. L. சென்னை.

நடமாடும் கலைமன்றமாக நாட்டிடை வாழ்ந்து படமாடும் நிலை மன்றமாக நம் உள்ளத்தில் திகழும் உயர்திரு மறைமலையடிகளார் நடமாடிய இல்லம் இறையுலாம் கோயிற்கு இணையாயது அன்றோ?

"உள்ள நிறை கலைத் துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளி வடித்தறிந்த பொருள் சிவன் கழலிற் செறிவென்றே"

வாழ்ந்த உத்தமச் சைவர் திலகம் நம் மறைமலையடிகள்.

"அலகில் கலையின் பொருட்கெல்லை
ஆடும் கழலே எனத்தெளிந்த"

அற்புதப் பெரியார் நம் மறைமலையடிகள். இக்கலை மன்றம் ஒரு மலை மன்றமாக ஓங்கி அருள் நிலை மன்றமாகத் திகழ்ந்து வாழ்க!

—திருவாசகமணி, K. M. **பாலசுப்பிரமணியம்**, B.A.,B.L., திருச்சி.

மறைமலையடிகளார் தமிழ்நாடு தந்த தனிப்பெரும் மேதை. ஆழ்ந்த புலவர்; சிறந்த சிந்தனையாளர்; பெரும்பேராசான். தம்முடைய ஒப்புஉயர்வற்ற பேச்சாலும் எழுத்தாலும் தமிழ் மொழிக்கு ஆக்கம் அளித்தவர். அவர் தம் அறிவு பல துறைகளில் கவடுகளாய், கிளைகளாய், கொப்புகளாய் விரிந்து சென்றிருப்பதை அவருடைய பல துறை நூல்கள் பறை சாற்றுகின்றன. ஒவ்வொரு நூலிலும் தனித் தமிழ் மணம் கமழ்கின்றது சைவ ஒளி வீசுகின்றது; அறிவுச்சுடர் ஒளிர்கின்றது. அவருடைய புகழ் தமிழ் இலக்கிய வானில் ஒரு கலங்கரை விளக்கம் போல் என்றும் நின்று நிலவும் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை.

—பேராசிரியர், **ந. சுப்பு ரெட்டியார்**, M. A., B. SC., L.T. திருப்பதி.

சேக்கிழார் பெருமான் போலவே மறைத் திரு. மறைமலையடிகளாரும் நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், போதகாசிரியராகவும், ஞானாசிரியராகவும் திகழ்ந்தார்.

—S. இராமச்சந்திரன், டெப்டிகலெக்டர், மதுரை.

தமிழ் நூல்களை மேனாட்டு முறைப்படி ஆராயும் வகையினைத் தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டிய பெருமை மறைமலையடிகளாரையே சாரும். விழா சிறந்து நடைபெறுவதாக.

—பு. ஆலாலசுந்தரம், M. A., தாம்பரம்.

" மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்,
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே "

என்றாங்கு மறைமலை அடிகளின் புகழ் என்றும் நின்று நிலவும் என்பதற்கு ஐயமில்லை.

—S. ஆறுமுக முதலியார், M. A., B. O. L., L. T. பழனி.

ஏனைய மொழி நெறிக் கலைச்செல்வங்கள் போகத்தில் மூழ்கிக் கரும்பு இருக்க இரும்பு கடித்து என்னே இதன் சுவையென இறும்பூதெய்திய அடிகளார் காலத்தில்,

தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா உன்தன் கலைச் செல்வமெலாம் உலகில் வேறெங்குளதடா என அவர்களைத் தட்டி யெழுப்பியவர் மூவர். அவர்கள் தாம் மறைமலையடிகள், கா. சுப்பிரமணிய பிள்ளை, பா. வே. மாணிக்க நாயகர் என்போர். அம் மூவரில் தம் வாழ்நாள் முழுவதையுமே தமிழ் மொழி நெறிப் பணிக்கே அர்ப்பணித்தவர் அடிகளார்.

—இ. வெண்ணிமாலை, B. A., B. L., தூத்துக்குடி.

திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள்,

"அடிகளார் வாழ்ந்த மாளிகையை நாட்டுக்குரிய பொது நிலையமாக ஆக்குவதில் தாங்கள் எடுத்துக்கொண்ட அயர்விலா முயற்சியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இது மிக இன்றியமையாச் செயல். இதனைச் செய்து முடித்துச் செயற்கரிய செய்த பெரியார் ஆகிவிட்டீர்கள்."

—ம. பா. தாமரைக் கண்ணி, வல்லை. பாலசுப்பிரமணியம், B. A., சென்னை.

மறைமலையடிகளார் நினைவு தமிழுலகில் என்றும் நிலைபெறக் கலைமன்றம் பெரிதும் துணை செய்யும் என நம்புகிறேன்.

—நெ. சு. ஞானப்பிரகாசம் M.A., M Sc, Ph d சென்னை.

பல்லாற்றானும் தன்னேரில்லாத் தனிப் பெரும் பன்மொழிப் புலவரும், பெருஞ்சொற் கொண்டலும் தமிழ்முறைத் துறவியும் ஆராய்ச்சி அறிஞரும் வடவரும் மேலையரும் ஒருங்கே தமிழை அழிக்கத் திட்டமிட்டபோது மார்தட்டி எதிர்நின்று தமிழைக் காப்பாற்றியவருமாகிய மறைமலை அடிகளாருடைய சிறு குடிலை இன்று கலைமன்றம் ஆக்குவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி. வெளி நாட்டிலிருந்து வரும் அனைவரும் காணவேண்டிய ஒரு கலைமன்றமாகத் திகழ ஆவன செய்ய வேண்டுகின்றேன்.

—க. கொன்றையாண்டி, புனல்வேலி.

ஆராய்ச்சி நூல், உணர்வு நூல், சைவ சமயம் பற்றிய கட்டுரைகள் இன்னோரன்ன நூல்கள் பல வியற்றித் தமிழ் மலையாய் விளங்கி அழியாப் புகழ் எய்திய அடிகளாரின் மாளிகையில் அன்னார் பெயரில் கலைமன்றம் நிறுவி மன்னுயிர்க்கு மகிழ்வளிக்க இருப்பது கேட்டு எல்லையற்ற மகிழ்ச்சி.

—த. சி. சுவாமிநாத உடையார், M.L.A., மன்னார்குடி.

எழுச்சி பெற்று நிற்கும் தமிழ் மொழிக்கு ஏற்றம் தரும் வகையில், தாங்கள் எடுத்துள்ள முயற்சி, என்றென்றும் நிலைக்க வல்ல செயலாகும். சிவநெறிக்கும் தமிழ் மொழிக்கும் அடிகளார் மேற்கொண்ட பணி, இம்மன்றத்தின் சார்பில் இன்னும் சிறப்பாக மிளிர்ந்து பயன் தரும் என்பதில் ஐயமில்லை.

—ஏ. ஆர். அருணாசலம் செட்டியார். சீயன்சீ கம்பெனி, சென்னை.

தமிழ்மொழிக்கும் கலைக்கும் இன்னல் எனச் செவிமடுத்த போதெல்லாம் வீறுகொண்டு அவர் ஆற்றிய தொண்டினை 20 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் வாழ்ந்த தமிழ்ப் பெருமக்கள் யாவரும் மறக்க மாட்டார்கள். இன்றைய தமிழ் மக்கள் வாழ்க்கையின் மறுமலர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தம் மையே ஈந்த ஒரு புனிதப் பேரறிஞர்.

—சிறுவை. மோகன சுந்தரன், நக்கீரர் கழகம், சென்னை.

கலைமன்றம் நீடூழி சிறந்து விளங்கித் தமிழ்நாட்டுக்கு அறிவு ஒளி வழங்குவதாக.

—ரா. விசுவநாதன், டாக்டர். உ. வே. சா. நூல்நிலையம், சென்னை.

அறிவுக்கடல்மீது வீறு கொண்டெழுந்த செந்தமிழ் ஞாயிறு. தனித்தமிழையே தம் மூச்செனக் கொண்டு வாணாள் முழுதும் தொண்டாற்றிய மறைமலையவர்கள் தமிழ் மக்களின் உள்ளங் களில் என்றும் 'மறையாமலை' யென விளங்குகின்றார்.

—திருக்குறட் கழகம், குகை, சேலம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சிறந்த அறநிலையம். ஆற்றிவரும் பணிகள்பல. அவை நீண்டகாலம் நின்று பயனளிக்க வல்லவை. காலத்திற் கேற்றவை. அவற்றுள் ஒன்று இக்கலை மன்றம் உருவாக்கியதும் ஆகும்.

—பேராசிரியர், நா. மீனாட்சிசுந்தரம், M.A., M. LITT., சென்னை.

தெள்ளத் தெளிந்த தமிழ் உரைநடையைப் பேச்சிலும் எழுத்திலும் பலகால் வழங்கி அதை வளம்பெற அமைத்ததும், அதை நன்கு பயில வழிகாட்டியதும், பிறமொழி நயங்களை பிற்காலத்தோர் செய்ததுபோலச் சுவை குன்றாமல் இக்காலத்துத் தமிழர்க்கு அறிவித்ததும் அவர்கள் செய்துவந்த தலைசிறந்த தொண்டுகளில் ஒரு சில.

—பெ. நா. அப்புசாமி, அட்வகேட், சென்னை.

மொழி, சமயம், வரலாற்று ஆராய்ச்சி, திறனாய்வு முதலிய பல துறைகளிற் சீரிய தொண்டாற்றியும் நம் மொழியில் இனிய, தெள்ளிய, தூய உரைநடை வகுத்தும் வழிகாட்டிய அடிகளார் அவர்கள் வாழ்ந்து சிறப்பித்த இக்கலைமன்றக் கட்டடமும் அவர்கள் ஆக்கிய நூல்களும் திரட்டிய நூல்களும் மறைமலையடிகளின் அழியாப் பெருமைக்குப் பல்லாண்டு கூறுநிற்கும்.

—சி. வேதாசலம், B.A., B.L., தஞ்சை.

அடிகளார் நினைவாக அமையும் இக்கலை மன்றம் அவர் வகுத்த தமிழ்நெறிகள் யாவும் செழித்து வளர வழிகாட்டும் அறிவாலயமாகவும் விளங்கவேண்டும். அவர் வழிநின்று ஆராய்ச்சி புரிந்து அரிய பெரிய அறிவுச் செல்வத்தைத் தமிழ்நாட்டுக்குதவும் ஆராய்ச்சி நிலையமாகவும் அது விளங்க வேண்டும்! அடிகளாருடைய முழு உருவச்சிலை யொன்று அப்பெரு மன்றத்தில் பொலிவுற அமைக்கப்படவேண்டும்.

—புலவர். கோ. வீரபதி, சென்னை.

அடிகளாரின் தொண்டினைப் பின்பற்றி நம் அருமைத் தாய் மொழியாகிய தமிழை என்றும் சீரிய இளமையுடன் காத்து வருவோமென இந்நன்னாளில் உறுதி எடுத்துக் கொள்ளுவோமாக.

—ஆ. பா. குமரப்பன், வேகுப்பட்டி.

மறைமலை அடிகளார் தமிழகப் புலவர்களின் தலைவர். அவர் பெயரால் திறக்கப்பெறும் இக்கலைமன்றம் தமிழக மன்றங்களுக்கு அரசாக விளங்கத்தக்கது. அதனைப் போற்றிப் பயன்படுத்த வேண்டுவது தமிழர்கடன்.

—புலவர். வி. சிவக்கொழுந்து, பெரியகுளம்.

மேனாட்டார் புலவர் பெருமக்களைச் சிறந்த முறையில் போற்றுகிறார்கள். நாமும் அந்த முறையில் போற்றினோமானால், நம் நாட்டுச் சீரிய மொழியும் சமயமும் ஓங்கும்.

—பூ. சமரபுரி முதலியார், தாம்பரம்.

பண்டைக் காலத் தமிழ் மக்கள் "தனக்கென வாழாப் பிறர்க் குரியாளராய்" வாழ்ந்தனர். அவர்கள் அனைவரும் செல்வத்தைச் சேமித்து வைக்காமல், பகுத்துண்டு பல உயிர்களையும் பாதுகாத் தலையே அறங்கள் பலவற்றுள்ளும் தலைமையாகக் கொண்டிருந் தனர். அதுபோல் நம் அடிகளாரும் பண்டைக்காலத் தமிழரின் பண்பைக் கடைப்பிடித்து நடத்திக் காட்டிய புலவராவார்.

—காளத்தி. நடேச முதலியார், சென்னை.

அயல் நாட்டாரும் வியக்கத்தக்க தமிழ் மொழியை மீண்டும் தெள்ளெனத் தெளிவாக்கிப் பெரும் பணியாற்றிய அடி களாரின் நூல்கள் என்றும் நிலைக்கற்பாலன.

—கே. என். எஸ். கண்ணப்பன், சென்னை.

மக்கள் நூறாண்டு வாழவேண்டுமென விரும்பிய நம் அடிகளார்க்கு நம் திரு. தெ. சை. சங்க ஆதரவில் கலைமன்றம் காண்பது மிக மிக அவசியமானதொரு பணியாகும்.

—மு. சாத்தப்பன், பாகனேரி.

திருவள்ளுவர் கலைமன்றத்தின் சார்பாக எமது உள்ளார்ந்த நல் வாழ்த்துக்களை இவண் தெரிவித்துக் கொள்வதுடன், தங்களது இச்சீரிய முயற்சியினைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

தமிழ்த் தென்றல் திரு வி க. அவர்கள் அடிகளைப் பாராட்டிக் கூறியுள்ளதை ஈண்டுச் சற்றே நோக்குவோம். "மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர், தமிழ் நிலவு. அவர் தம் தமிழ்ப் புலமையும், வடமொழிப் புலமையும், ஆங்கிலப் புலமை யும், ஆராய்ச்சிப் பேச்சும், எழுத்தும், தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன. அடிகள் பேச்சு, பல பேச்சாளரைப் படைத் தது. எழுத்து, பல எழுத்தாளரை ஈன்றது."! அடிகளது தனித் தமிழ்த் தொண்டு போற்றுதற்குரியது.

—அ. வை. இராமமூர்த்தி, மேற்கு வங்காளம்.

ஆசிரியர் மறைமலையடிகளின் திருவுள்ளம் ஒரு பல்கலைக் கழகமாக விளங்கிற்று. அன்னார் தமிழ் மொழிக்குச் செய்த அருந் தொண்டின் சிறப்பினால், அவர்கள் மாளிகையும் ஒரு கலைக் கோயிலாகக் காட்சி தரும் பேற்றினையடைந்தது.

—தெ. கணபதியப்பன், திருவள்ளுவர் கழகம், தென்காசி.

வாழ்த்துப்பாக்கள்

எவன் தனிச்செந் தமிழ்மொழியில் எழுதுமுறைக்
கெடுத்துக் காட்டாகி நின்றான்
எவன்நமது தமிழ்மொழியின் எழுச்சிக்கிங்
குழைத்துழைத்தே இன்பம் உற்றான்
எவன்சிறந்த ஆராய்ச்சித் திறன்விளங்கும்
நூல்கள்பல இயற்றி ஈந்தான்
அவனேநாம் வழுத்துமறை மலையடிகள்
எனும்பெயர்கொள் எழில்மிக் கோனே.

அவன்வாழி அவன்வகுத்த முறைதெரிந்து
தமிழ்க்குழைக்கும் அன்பர் வாழி
அவன்வாழி அவனடிக்கீழ் எனைப்போலப்
படித்தவர்கள் ஆரும் வாழி
அவன்வாழி அவன்பெயரைப் போற்றிமகிழ்
அன்பர்குழாம் அனைத்தும் வாழி
அவன்வாழி அவன்பெயரால் எழுகின்ற
கலைமன்றம் என்றும் வாழி.

—வ. சு. செங்கல்வராயபிள்ளை, சென்னை.

தென்னிந் தியசைவ சித்தாந்த சங்கத்தின்
முன்னுநல் லாதரவின் மொய்ம்புற்று—மன்னும்
மலையாம் மறைமலையார் மன்பெயரால் தோன்றுங்
கலைமன்றம் வாழி கனிந்து. —புலவர்-அரசு, சென்னை.

காட்சிகள் சேர்ந்திடக் கலைமன் றத்தை
மாட்சிகொள் பல்லா வரத்தில் இந்நாள்
பண்புடை மேலோர் பற்பலர் முன்னர்
நண்புடை நாவலர் நயந்து போற்றத்
திறந்திட லுற்றது சீர்மிகும் அன்னோன்
பிறந்த நாடுசெய் பெரும்பயன் அன்றோ?
மன்றம் வாழ்க! மறைமலை வாழ்க!
குன்றமர் முருகன் குலவருட் பேற்றால்
மண்டலப் பெரியோர் மகிழ்வுடன் வாழ்கவே.

—தி. மு. சங்கரலிங்கம், திருவாமாத்தூர்

மன்றத்தை நிறுவி யோரும் மகிழ்வுரை வழங்கு வோரும்
குன்றொத்த குணத்தின் மிக்க அடிகளின் குலத்து ளோரும்
என்றென்றும் வாழ்க வென்றே இனிமையாய்த் திறந்து ளோரும்
நன்றருள் சோம சுந்தர அடிகளும் நாளும் வாழ்க.

—ந. சேதுரகுநாதன், விருதுநகர்.

டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் சொற்பொழிவாற்றுவது



திரு. ச. சிவகுமரன், எம். ஏ. சொற்பொழிவாற்றுவது



அருட்கவி சேதுராமன்
அம்மை அம்பலவாணர் திருமுன் பாடுவது

அருட்கவி சேதுராமன் பாடுவதும்
அருட்டிரு சுப்பிரமணியம் எழுதுவதும்

பன்னலம் சேர்க்கும் சைவசித் தாந்தப்
பதிப்பகத் தார்களின் முயற்சி
கன்னலை ஒக்கும் கனிதமிழ் நூலும்
கலைமலி நூல்களும் கூட்டிச்
சென்னைமா நகரின் பல்லாவ ரத்தில்
சாவடித் தெருவினில் என்றும்
மன்னிய புகழ்சேர் மறைமலை யடிகள்
கலைமன்றம் கண்டது! வாழி!

—மதுரகவி. நா. ம. வெள்ளைவாரணம், திருப்பனந்தாள்.

நிறையறிவா ளரால் நெடுந்தமிழ்த் தொண்டு
நிலைபெறச் செய்நற் செம்மல்
மறைமலை யடிகள் மாண்பெலாம் விளங்க
மகிழ்கலை மன்றமொன் றாக்கி
முறையுறத் தொண்டு மொய்ம்புட னாற்றும்
முத்தமிழ்த் தொண்டுசெய் நல்லீர்
குறையற ஓங்குக குவலயம் வாழ்க
குறிக்கொடு பணிசெய்து வாழி.

—எஸ். சுயம்பிரகாசம், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

மறைமலை யடிகளின் மறையா மலையதாய்
நிறைகலை மன்றமாய் நீடுநின் றொளிர்கென
நாகைத் தமிழ்ச்சங் கத்தினம்
ஓகை யுளத்தினம் வாழ்த்தினம்; வாழ்க!

—கோவை இளஞ்சேரன், அமைச்சர், நாகைத் தமிழ்ச் சங்கம்.

துறையுறு தமிழின் மேன்மை
தொகையுறு நூலின் மேன்மை
உறைவுறு முன்னோர் மேன்மை
ஒன்னலர் சிறுமை தீமை
முறையுற அறிவா ருண்டோ?
மொழிந்துயர் வடைவா ருண்டோ?
மறைமலை யடிகள் தோன்றி
வருந்திநூல் செய்யா ராயின்.

—வித்துவான். பெ. கோவிந்தன், சீவில்லிபுத்தூர்.

நன்மலையின் பெயராலே நானிலத்தில் மன்றங்கள்
பொன்மலையாய்க் காட்சிதரப் பூத்தெழுதல் வேண்டுமதற்
கென்மலையைப் பாருங்கள் எனப்பல்லா வரநங்கை
வன்மலைக்கு மலர்ந்தளித்தாள் கலைமன்றம் நனிவாழி!

—இரா. இளங்குமரன், திருப்பரங்குன்றம்.

"இறையருள் நெறிஇது எனவுணர் பெரியார்
நிறைதமிழ் உயர்தனிச் செம்மொழி எனவே
அறைதரு நூல்பல ஆக்கிடும் திறனார்
மறைமலை யடிகளின் மாண்புகழ் வாழ்க."

—வே. சிவசுப்பிரமணியன், மயிலம்.

உலகமெலாம் பரவுதமிழ் மொழிநிலைமை
 உயரவரும் உழைப்பு மேற்கொண்(டு)
இலகுபல வகைநிறையப் பணிபுரியும்
 தமிழ்க்கழகம் ஈதொன்றே யென்(று)
அலகில்பல தேயத்துக் கலைஞர்களும்
 வியக்குநரா யணுகுஞ் சென்னை
நிலையம் நிறாஉம் மறைமலையார் கலைமன்றம்
 குறிக்கோளின் நிறைக நன்றே!

—சு. சிவப்பிரகாசன், சென்னை.

அறைகடல் உலகில் முப்மொழி அறிந்தே
 ஆய்வுநூல் ஆக்கிய அறிஞன்
பிறைமதி சூடும் இறையடி நாடிப்
 பெருநிலை மேவிய பெருமான்
மறைமலை யடிகள் மகிழ்மனை யிந்நாள்
 நிலையுயர் கலைவளர் மன்றாய்
நிறைமதி யாளர் திறந்திட மிளிர்ந்தே
 நெடிதிவண் நிலவுக மன்னோ!

—சேந்தை. ரா. மாணிக்கவாசகன், காட்டுப்புத்தூர்.

தெள்ளு தமிழில் உள்ளம் உருகிப்
பல்லா வரத்தில் பற்பல நூல்கள்
எல்லார் நலனுக்கு மெழுதிக் குவித்த
நல்லார் மறைமலை அடிகள் மன்றம்
நாளும் வாழ்க; நலம்பல மலிகவே!

—சிவ. பிருந்தாதேவி, புதுக்கோட்டை.

"அண்டிவந்தோர் சூழ்ச்சியினால் அவலமுற்று
 மதிமயங்கி அடிமை வாழ்வு
கொண்டிருந்த தமிழினத்தின் குறைநீக்கிப்
 புதுவாழ்வு கொடுத்து மீண்டும்
பண்டிருந்த சிறப்பெல்லாம் பண்புடனே
 எய்தவழி பகர்ந்த செம்மல்
மண்டுபுகழ் மறைமலையை நினைவுறுத்துங்
 கலைமன்றம் மலர்ந்து வாழ்க!

—கா. பொ. இரத்தினம், இலங்கை.

உயர்நெறி உணர்த்திய உத்தமச் செம்மல்
உறுமா ளிகையை "மறைமலை யடிகள்
கலைமன் றம்"எனக் கவினுற அமைத்த
சைவசித் தாந்தச் சங்கத் தலைவர்
விற்பனர் புகழ் வ. சுப்பையா பிள்ளையும்
பெரும்பொரு ளளித்துப் பேணிய மத்திய
அரசும் தமிழ்நாட் டரசும் வாழியர்
எந்நாட் டவர்க்கும் இக்கலை மன்றம்
அறிவொளி நல்கி இவ் வவனியில்
நிறைபுக ழுற்று நீடுவா ழியவே.

—எஸ். நடராசன், பி. ஏ., எல். டி., குறிச்சி.

கீழ்க்கண்ட பெருமக்களிடமிருந்தும் தந்திகள் மூலமும் கடிதங்கள் மூலமும் வாழ்த்துச் செய்திகள் வந்துள்ளன :—

உயர்திரு. என். வி. காட்கில், ஆளுநர், பஞ்சாப். கருமுத்து தியாகராச செட்டியார், மதுரை. டாக்டர், துரை. அரங்கசுவாமி, எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச்டி., மதுரை. டாக்டர். சிற்சபை, காஞ்சிபுரம். பாரதி தமிழ்ச் சங்கத்தார், கல்கத்தா. கி. வா. ஜகந்நாதன், சென்னை. வித்துவான் மறை. திருநாவுக்கரசு, தூத்துக்குடி. ஜீ. டி. நாயுடு, கோவை. ஏ. சீனிவாச ராகவன், வ. உ. சி. கல்லூரி முதல்வர், தூத்துக்குடி. ஆலங்காடன், சேலம். சோம. லெ, நெற்குப்பை. மி. மூ, சின்ன சாமி, சேலம். ச. மீனாட்சிசுந்தரம், பி. ஏ., எல். டி., கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு. ஆ. மாணிக்கம், சேலம். மா. சண்முக சுப்பிரமணியம், மாவட்ட முன்சீபு, கும்பகோணம். திரு. சிவசைலம், எம். ஏ., எல். டி., சென்னை. என். எஸ். முத்துக் கிருட்டிணராஜா, நூலகர், காந்தி கலைமன்றம், சென்னை. எஸ். வி. எம். மெய்யப்ப செட்டியார், தேவகோட்டை. செந்துறை முத்து, சேலம். ஏ. கே. வேலன், சென்னை. டாக்டர் சண்முகம், பாளையங்கோட்டை. வித்துவான் சி. கைலாயம், திருக்கழுக் குன்றம். சோ. சாமிநாதன், பாரதி புத்தக நிலையம், மதுரை. அ. திருநாவுக்கரசு, தென்னக இரயில்வே, சென்னை. சிவ. பழமலை, பெண்ணாகடம். ந. பா. தணிகையரசு, வாலாஜாபாத். ஏ. எஸ். கோவிந்தராசன், சென்னை. தி. சிவகுருநாதன், திருப்பராய்த் துறை. ச. சிவசாமித் தேசிகர், காஞ்சி. ஆர். பஞ்சநதன் பிள்ளை, திருச்சி. லெ. பழனியப்பச் செட்டியார், தேவகோட்டை. ச. சாம்பசிவன், மதுரைத் திருவள்ளுவர் கழகம். பம்மல் சம்பந்த முதலியார், சென்னை. காசிநாததுரை, இராமநாதபுரம்.

மறைமலையடிகளாரின் நன்றியுரை

ஆன்றமைந்த அருந்திறனுடை அன்பர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கட்கு,

உடம்பொடு உயிரிடைக் கேண்மை பிரியினும், உள்ள மோர்த்து உள்ளதுணர்ந்தும், சார்புணர்ந்தும் சார்பு கெடா தொழுகும் மறைமலையடிகள், ஊனை நாடகமாடுவித்த அருளுடைச் சுடராம் அம்மை அம்பலவாணரிடம் எம் வையகத் துடை இச்சை நைந்திட ஞான நாடக மாடுவித்திட இன்னரு ளொளி வந்தெம்முளத்து ஒளி திகழுமா றருள, கழல் பணிந் திறைஞ்சி வரைகுதும்.

பழையார்கட் பண்பின் தலைப்பிரியாப் பொற்ப!

எல்லைக்கண் நின்றவராய யாம், தம்முலகு நீத்த பின்னரும், தொல்லைக்கண் நிற்குந் தம்தொடர்பினை விடாது, அன்பின் தலைக்கண் நின்று வேண்டிய பெரு விருப்பாம், மண்ணுறை காலை யாம் வாழ்ந்து பிரிந்த பல்லாவரத் திருமனை யகத்து, செறிபொழில் சூழ் தில்லைநகர்ச் சிற்றம்பலத்து ஞானநாடகம் ஆடும் அருட்டிருவொளி ஆனந்தத் தாண்டவக் கூத்தனின் திருவுரு, ஓங்கியுளத் தொளிவரக் கருணை நல்கிட அமைத்து, வித்தகன் திருவிளையாடல் விளங்கு தில்லை போல் திருமனை யகத்தும் விளங்கிட, உலப்பிலா அன்புடன் கருத்திருத்தி யான் எனதென்னுரை மாய்த்து அருளிட நாடொறும் இறைஞ்சிய ஒளித் திருவுரு! தூசுபடிந்து போற்றுவாரற்றிருக்கும் மெய்ந்நிலையினை யெடுத்தியம்பி, வரைந்து, தம்முள்ளத் தமைத்து, அத்திருமனை கலைமன்றமாக மிளிர்தலே சாலப் பொருந்துமென விழைந்தமை நிறைவுற, கெடாஅ வழிவந்த கேண்மையால், விழையார் விழைந் திடும் விழுச்சீர்ப் புகழொடு, உலகு களித்திட, தமிழர் உவந்திட உலகியற் கருத்திற் றரித்து, தெரிதலும் தேர்ந்து செயலும் மீக்கெழ முறைப்பட ஆற்றிக் கலைமன்ற மமைத்த தந்திறப் பாட்டினுக்குக் கடப்பாடுடையேம் மறைமலையடிகள்.

சான்றாண்மை குன்றாச் சான்றோய்!

தங்குண நலச் சால்பு பொங்கி, இன்னா செய்தார்க்கும் அவர் நாண நன்னயம் செய்து சான்றாண்மைக்கு ஆழி தாமென, உறுவது சீர்தூக்கும் நட்புடையாளர் நாணா, அன்பரு அன்பின் வழித் தோன்றலாந் தமிழர்கள் தனிப் பண்புசார் புகழினை விரிநீருலகு வியந்திட, ஆய்ந்தாய்ந்து செய்வினை செய்வான் செயல்முறை, அவ்வினை உள்ளறிந் துளங்கொண்டு, நம்மொழித் தண்டமிழ் மொழி வளத்தொடு ஊடிஊடிக் கலந்துள்ளுருகிப் பெருகி நெக்காடி ஆடி அருள்செறி மொழிவளந் துய்த்து, அருந் திறனுடைத் தம் வலியுடன் தமிழ்ப்பணி பல்வழி யாற்றப் பல்கால் துன்புஇல் இன்பெழு சிறப்பிடை வாழ்ந்திடக் கழிவில் கருணை பொழிந்திடப் பண்தமிழ்த் தீங்குரற்குக் களித்து உலப்பிடை அருளும், தேனினுமினிய தீந்தமிழ்த் திருமறை வாசகம் அருளிய ஒப்பில் பெருமையன் மணிவாசகப்பெருந்தகை தெளிதரும் திரு மொழி காட்டும், பருவரை மங்கைதன்பங்கராம் அம்மை அம்பல வாணரின் சீருடைத் திருவடி நாயினேம் சிக்கெனப் பற்றுவேம்.

நெல்லை இயக்குநர்வழி, 30-7-62.

அருட்புகழ்

[அருட்கவி சேதுராமன் அவர்கள் பாடியது]

பல்லாவரம் சாவடித்தெருவிலுள்ள மறைமலையடிகள் கலைமன்றம்

(29-7-1962)

கலைமன்றம் பல்லாற்றானும் சிறந்தோங்க அம்மையம்பல வாணர் திருநாள் என வழங்கப்படும் ஆதிரை நன்னாளில் அவர்க்கும், அவர்தம் திருவடிப் பேறருளாலுற்று அளவிலாச் சீர்சிறப்பெய்திய செந்நெறி முதல்வர் நால்வர்க்கும் சிறப்பு வழிபாடாற்றிய போழ்து வரும் திருப்பாடல்கள் அருளுந்து தலால் பாடப் பெற்றன.

விநாயகர் வணக்கம்

1. தவநெறிபெற

தோடி] [மிச்ரதிரிபுடை

தனதன தனதனன தானனத் தனதான

கிளர்தரு மும்மலவினை போயறப் பலகாலும்—
கெடுதலில் திருவடிவி னாவொடுற் றிசைபாடத்;
தளர்வறு தமிழ்மறையை ஓதுதற் கொழியாத—
தவநெறி திருவருள்செய் தால்மிகக் குறைவோதான்;
களர்முதல் வெகுபலசி வாலயத் துறைகாளாய்—
கணபதி குணநிதியெ னாமமுற் றொளிரானாய்;
வளர்பொழில் மருவியப லாவரப் பதியூடே—
மறைமலை யடிகள்திரு மாளிகைப் பெருமாளே.

குறிப்புரை: கிளர்தரு - விளங்குகின்ற. மும்மலவினை - ஆணவ, கன்ம, மாயா மும்மலங்கள்; நல்வினை, தீவினை இருவினைகள். கெடுதல் இல் - அழிவில்லாத. வினாவொடு உற்று - ஆராய்ச்சி செய்து. தமிழ் மறை - தேவார திருவாசகங்கள். ஒழியாத - நீங்காத. களர் - திருக் களர்; சோணாட்டிற் சம்பந்தர் தேவாரம் பெற்ற சிவத்தலம்; இங் குள்ளவர் வலம்புரி விநாயகர். காளாய் - காளைபோன்றவனே. குண நிதி - நற்குணங்களுக்கு இருப்பிடம். என் நாமம் உற்று - என்கின்ற பேர் பொருந்தி. ஆனாய் - ஆனையே! ஒளிர் - ஒளிர்தல்: முதனிலைத் தொழிற்பெயர். ஆனாய் ஆனவனே எனினுமாம். பலாவரப் பதி - பல்லாவரம் என்னும் தலம். மறைமலையடிகள் திருமாளிகை - மறைமலை யடிகளார் வாழ்ந்த வீடாயிருந்து தற்போது கலைமன்றமாக்கப்பட்டுள்ள இடம்.

அம்மையம்பலவாணர் திருமுன்

பண்-கௌசிகம்
ராகம் - பைரவி

தாளம்
ரூபகம்

எழுசீரடியாசிரிய விருத்தப் பதிகம்

கடிகொள் கொன்றை கரந்தை கூவிளம் காசி அஃகரம் சூடுவீர்!
செடிகொள் வெண்டலை சேநெ டுங்கொடி தீபி னாகம் சிறுதுடி
வடிகொள் சூல்மழு மான்கை யாளி!பல் லாவ ரத்தில் மறைமலை
அடிக ளார்கலை மன்ற மேவுமெம் அம்மை யம்பல வாணரே! (1)

குறிப்புரை : கடி - நறுமணம். கரந்தை - திருநீற்றுப் பச்சை. கூவிளம் - வில்வம். காசி - விளா. அஃகரம் - வெள்ளெருக்கு. செடி - துர்நாற்றம். சேநெடுங்கொடி - நெடுஞ்சேக் கொடி - நீண்ட இடபக் கொடி. தீ - நெருப்பு. பினாகம் - பினாக வில் (சிவன் வில்). துடி - உடுக்கை. வடி - கூர்மை. சூல் - சூலம். மழு - பரசு. கையாளி - கையில் ஆள்பவரே. அம்மை - சிவகாமியம்மையார்.

கண்ண னுங்கம லத்த னுங்கழல் வேணி காணக் கருதியே
விண்ண மேற்பறந் தன்ன மாகி மிகக்கு டைந்தொர்வெண் பன்றியாய்
மண்ண டைந்தடை தற்கொ ணாதிர்!பல் லாவ ரத்தில் மறைமலை
அண்ண லார்கலை மன்ற மேவுமெம் அம்மை யம்பல வாணரே! (2)

குறிப்புரை : கண்ணன் - திருமால். கமலத்தன் - பிரமன். கழல் திருவடி. வேணி - திருமுடி. விண்ணம் - ஆகாயம். கமலத்தன் அன்னமாகி விண்ணமேற் பறந்து எனவும், கண்ணன் ஓர்வெண் பன்றி யாய் மிகக் குடைந்து மண்ணின் அடைந்து எனவும் கூட்டிப் பொருள் கொள்க. மண் அடைந்து - மண் அடித்தலத்தைச் சேர்ந்து. அடைதற் கொணாதிர் - அடைய முடியாதவரே!

கைய டைந்த கழுக்க டைகொள் கபாலி யே!கறைக் கண்டனீர்!
பொய்ய டைந்த புலைய னேனைப் பொருட்ப டுத்திப் புரப்பிரோ!
வைய டைந்த மழுக்கொள் பாணி!பல் லாவ ரத்தில் மறைமலை
ஐயர் தங்கலை மன்ற மேவுமெம் அம்மை யம்பல வாணரே! (3)

குறிப்புரை : கழுக்கடை - சூலப்படை. புரப்பிரோ - காப்பாற்று வீரோ! வை - கூர்மை. மழு - பாசாயுதம். பாணி - கையையுடை யவரே! ஐயர் - பெரியவர்; தலைவர்.

ஒன்ப தாகிய கோள்கொ டுங்குணம் ஓட வைக்கும் ஒருத்தனீர்!
என்ப தாற்செய்த கூடு தோற்பொதி இந்த ஆக்கை அளித்ததேன்?
மன்ப தைக்கொரு காட்சி யாகும்பல் லாவ ரத்தில் மறைமலை
அன்ப னார்கலை மன்ற மேவுமெம் அம்மை யம்பல வாணரே! (4)

குறிப்புரை : ஒன்பதாகிய கோள் - நவக்கிரகம். கொடுங் குணம் - கொடிய (கெட்ட) குணங்கள். என்பதால் - எலும்புகளால். பொதி - சுமை. என்பதால்........ஆக்கை: "அன்பின்வழிய துயிர்நிலை அஃ திலார்க் கென்புதோல் போர்த்த உடம்பு"—திருக்குறள். மன்பதை -

உயிர்கள். காட்சியாகும் - பொதுமக்கட்கொரு காட்சி மன்றமாகும் கலை மன்றம்.

பூண்ட கொள்கை பொருந்தி டேன்கழல் போற்று முண்மை தெரிந்திடேன்
தாண்ட வஞ்செயும் தில்லை சென்றும தாள்கள் கும்பிட எண்ணிலேன்
மாண்ட பின்பயன் எய்து மோ!சால்பல் லாவ ரத்தில் மறைமலை
ஆண்ட கைக்கலை மன்ற மேவுமெம் அம்மை யம்பல வாணரே! (5)

குறிப்புரை: பூண்ட - மேற்கொண்ட. பொருந்திடேன் - நிலையாக நிற்கமாட்டேன். தாண்டவம் - நடனம். மாண்டபின் - இறந்துபோன பின்னர். பயன் எய்துமோ - (இறந்த பின்தான்) பலன் கிட்டுமோ! (உயிரோடு இருக்கும்போது) கிட்டாதோ என்றவாறு. ஆண்டகை - ஆண்களுட் சிறந்தோன்.

தூசா வெல்புலித் தோலு ழையதள் சிங்கத் தோல்புனை தொன்மையீர்!
தேசார் மைக்கரி ஈர மாருரிப் போர்வை போர்த்த சிறப்பினீர்!
மாசார் உள்ளத்தர் தேரொ ணுதபல் லாவ ரத்தில் மறைமலை
ஆசான் மெய்க்கலை மன்ற மேவுமெம் அம்மை யம்பல வாணரே! (6)

குறிப்புரை: தூசா - ஆடையாக. உழைஅதள் - மான் தோல். தொன்மை - பழமை. தேசு - ஒளி. மைக்கரி - கறுத்த யானை. ஈரம் ஆர் உரி - ஈரம் பொருந்திய தோல். தேரொணுத-தேர்ந்தறிய முடியாத. ஆசான் - ஆசிரியர்.

காரி யாரொடு நாரி யார்கவிப் பாப்ப குந்திட்ட கர்த்தனீர்!
ஓரி யாரிடு காட்டி லாடலு கந்துசெய் யுந்தி ருத்தனீர்!
மாரி யார்பொழில் மல்கு சென்னைப்பல் லாவ ரத்தில் மறைமலை
ஆரி யர்கலை மன்ற மேவுமெம் அம்மை யம்பல வாணரே! (7)

குறிப்புரை: காரியார், நாரியார் பாடல்களில் ஒரு பகுதியைச் சொக்கர் தமக்கெனப் பகுத்துக்கொண்ட ஆடலை வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணத்திற் காண்க. கவிப்பா - பாடல் - ஒருபொருளிரு சொல். ஓரி - நரி. ஆர் - பொருந்திய. இடுகாட்டில் - சுடுகாட்டில். மாரி - மழை; மேகம். ஆரியர் - சான்றோர்.

மாச றுந்திங்கள் கங்கை மின்னொடு வன்னி ஊமத்தை வேணிகொள்
தேச னீர்!திரு வாதி ரைத்திரு நாட்சி றப்புக் குரியனீர்!
தாச னைனத் தாங்கிக் கொள்ளப்பல் லாவ ரத்தினிற் சாமிவே
தாச லக்கலை மன்ற மேவுமெம் அம்மை யம்பல வாணரே! (8)

குறிப்புரை: மாசறுந் திங்கள் கங்கை—'மாசறு திங்கள் கங்கை" - சம்பந்தர் ("வேயுறு தோளி"). வேணி - சடை. தேசன் - ஒளியுடையவன். திருவாதிரைத் திருநாள் - சிவபிரானின் திருநாள். 'ஆதிரையான்' என்றே சிவபிராற்குத் திருநாமமுண்டு. இப்பாடல் பாடப்பெற்ற நன்னாளும் ஆடித் திருவாதிரைத் திருநாளே என்பது ஈண்டு உணரற்பாலது. தாசனை - தொண்டனை. சாமி வேதாசலம் - மறைமலை அடிகளாரது பழைய பெயர்.

திருந்த மிழ்தெனச் செப்பு வாசகம் தேனை ஒத்ததே வாரங்கள்
மருந்த மிழ்தென மண்ணுக் கீந்த மறைக்கு லச்சைவர் நால்வரும்
பெருந்த மிழ்க்கென அண்மை வாய்ப்பப்பல் லாவ ரத்தில் மறைமலை
அருந்த மிழ்க்கலை மன்ற மேவுமெம் அம்மை யம்பல வாணரே! (9)

குறிப்புரை : வாசகம் - திருவாசகம். மருந்து அமிழ்து - அமிர்தம்; ஒருபொருள் இருசொல். மண்ணுக்கு - உலகுக்கு. மறைக்குலச் சைவர் நால்வர் - தமிழ் மறையாகிய தேவார திருவாசகங்களுக்குரிய சிறந்த சிவ பக்தர்களாம் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வர். குலம் - சிறப்பு. வரும் தமிழ்க்கு என - இனிவரும் தமிழ் வாழ்வதற்காக. அண்மை வாய்ப்ப - அருகில் வீற்றிருக்க.

பொருட்பெ ருங்குறி யாலு டன்மெலி புன்மை யாளர் புவிக்கணே
மருட்பெ ருங்கன லாலெ ரிந்துயிர் மண்பு தைந்திட மாய்வரால்;
மருட்பெ ருங்கனல் மாய்க்க நீடுபல் லாவ ரத்தில் மறைமலை
அருட்பெ ருங்கலை மன்ற மேவுமெம் அம்மை யம்பல வாணரே!

குறிப்புரை: பொருட்பெருங் குறியால் - பொருளுடைமையே பெரிய குறிக்கோளாகக்கொண்டு. உடன்மெலி - உடல் மெலிந்த. புன்மையாளர் - புல்லறிவாளர்கள் மருட்கனல் - அறியாமை என்னும் நெருப்பு. மாய்வரால் அழிவர் ஆல் : அசை.

சொற்ப தங்கடந் தோங்கு கின்ற சுடர்ப்பெ ருஞ்சுயஞ் சோதியே!
பற்ப தஞ்சிலை யாக்கொள் பாணியீர்! பண்ணொ டேமறை பாடுவீர்!
மற்ப தங்கொளெண் டோள்கொள் தாணு!பல் லாவ ரத்தில் மறைமலை
அற்பு தக்கலை மன்ற மேவுமெம் அம்மை யம்பல வாணரே! (11)

குறிப்புரை: சொல் பதம் - சொற்களின் தரம். "சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க"—திருவா-திருவண்டப்-40-உம் மறைமலை யடிகளார் உரையுங் காண்க. சயஞ்சோதி - இயற்கை ஒளி. பற்பதம் - பர்ப்பதம்; (மேரு) மலை. சிலை - வில். பாணி - கை. பண்ணொடே மறை பாடுவீர் - இசையோடு வேதம் ஓதுவீர். மல்பதம் - மல்யுத்தத்துக்கு ஏற்ற பக்குவம். தாணு - சிவபிரான்.

சிவகாமியம்மை வணக்கம்

சங்கராபரணம்] [சுத்தாங்கம்

அறுசீரடி யாசிரிய விருத்தம்

தேனூரும் செழும்புறவிற் றில்லைப்பொன் னம்பலத்தே
செவ்வே ஆடும்
மானூரும் இடக்கரவர் மன்றுடி யாரொருபால்
வயங்கல் போலே
வானூரும் புகழ்கொள்மறை மலையடிகள் கலைமன்ற
மாளி கைக்கண்
பானூறும் மொழியரோர்பாற் சிவகாம சுந்தரியார்
பதங்கள் போற்றி.

குறிப்புரை: புறவு - முல்லை நிலம். செவ்வே - நன்றாக. இடக் கரவர் - இடது கையை உடையவர். காத்தவர் என்பது காவர் என அத்துச்சாரியை தொக்கு நிற்க வந்தது. மன்றாடியார் - சபையில் ஆடினவர். வயங்கல் - விளங்குதல் வயங்கல்போலே.....சிவகாமசுந்தரியார் என்றதால் விளங்கும் என்பதைச் சொல்லெச்சமாக்கொண்டு வருவித்துப் பாலுறும் மொழியர் ஓர்பால் 'விளங்கும்' எனப் பொருள் காண்க. பால் நாறும் மொழியர் - பால்மணம் வீசும் இனிய மொழி பேசும் நடராசப் பிரான்.

திருஞானசம்பந்தர் வணக்கம்

சீர்மேந்த்ராத்யமம்] [சுத்தாங்கம்

கொச்சகக் கலிப்பா

ஒருஞானம் உமையருளால் உலகுய்யக் கைவரப்பெற்
றருஞானம் அரனருளால் அமையச்செந் தமிழ்பாடி
வருஞான மறையர்மறை மலையடிகள் கலைமன்றத்
திருஞான சம்பந்தர் திருவடித்தண் மலர்வாழி. (1)

குறிப்புரை: ஒரு ஞானம் - ஒப்பற்ற அபர ஞானம். அருஞானம்- அருமையான பரஞானம். பாடிவரு - பாடிவந்த. ஞானமறையர் - ஞானம்மிக்க அந்தணர் குலத்தவர்.

திருநாவுக்கரசர் வணக்கம்

கருநாவுக் கரிவாளாக் களத்ததமிழ்ப் பணிசெய்து
பெருநாவுக் குரையாடி யானருளாற் பேறுபெற்ற
மருநாவுக் கரையர்மறை மலையடிகள் கலைமன்றத்
திருநாவுக் கரையர்கழற் செழுமலர்கள் அவைவாழி. (2)

குறிப்புரை: கருநாவுக்கு அரிவாளா - பிறவி வேருக்கு வாள் போல. பெருநாவு - உள்நா பெருநா எனப்பட்டதுபோலும். நாவுக்கு உரையாடியான் - நாவில் நின்று பேசுபவனான சிவபிரான். "உண்ணின்ற நாவிற் குரையாடியாம்"—அப்பர், 6-15-1. மரு நாவுக்கு-மருவுகின்ற நாக்குக்கு. மரு நா - 'தமிழ்' மணம் வீசும் நாக்கு எனினுமாம். அரையர் - அரசர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வணக்கம்

இன்றொண்டை கொண்டெழிலாய் எம்மானைப் பித்தனென
அன்றொண் டமிழ்க்கவியால் அருட்டுறையில் அழைத்தருளி
வன்றொண்டு மகிழ்வர்மறை மலையடிகள் கலைமன்ற
வன்றொண்டர் ஆலால சுந்தரர்தாள் மலர்போற்றி. (3)

குறிப்புரை: இன்தொண்டை - இனிய குரல். அன்றுஒண் தமிழ்க் கவியால் - முன்னொருகால் ஒள்ளிய தமிழ்ப்பாட்டால். அருட்டுறை - திருவெண்ணெய்நல்லூர்த் திருக்கோயிலின் பெயர். வன்தொண்டு-வலிய

திருப்பணி. வன்றொண்டர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள். ஆலாலசுந்தரர் - ஆலகாலவிடத்தைக் கையிலேந்தி அரனுக்கு அளித்தமையால் இப்பெயர் பெற்றனர் சுந்தரமூர்த்தியார்.

மாணிக்கவாசக சுவாமிகள் வணக்கம்

காணிக்கை அரன்தாட்கே கனதனமாப் பெருந்துறையிற்
பேணிக் கனகப் பெருங்கோயில் செய்தபிரான்
வாணிக்கு வதிகைமறை மலையடிகள் கலைமன்ற
மாணிக்க வாசகர்தம் மணிமலர்த்தா ளிணைபோற்றி. (4)

குறிப்புரை: காணிக்கை - அர்ப்பணிக்கும் பொருள். கனதனம் - பெருத்த செல்வம். கனகப்பெருங் கோயில் - பெரிய பொற்கோயில் போன்ற கற்கோயில். வாணிக்கு வதிகை - கலைமகட்கு இருப்பிடம். மணிமலர்த்தாள் - அழகிய மலரடி.

வாழ்த்து

வாழிய சென்னை மாநகர்ப் பல்லா
வரமெனும் வளம்பதி என்றும்
வாழிய மற்றும் மறைமலை யடிகள்
மாளிகை யாங்கலை மன்றம்
வாழிய அம்மை அம்பல வாணர்;
மாக்கண பதியொடு நால்வர்
வாழிய; *சிவசித் தாந்தநூற் பதிப்புக்
கழகமும் வாழிய மாதோ.

(முற்றும்)

குறிப்பு: தோற்பொருள் வணிகர் சர்மா பிரதர்ஸ் உரிமையாளர் திருவாளர். என். வி. அனந்தராமன் அவர்கள் அம்மையம்பலவாணர் நால்வர் முதலாய கடவுளர்க்குக் குழைத் தழுதுவப்பிக்கப் பல்வகை யன்னங்கள் படைத்தளித்தமை பாராட்டத்தக்கது.

* சிவ சித்தாந்த - சைவசித்தாந்த.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை, 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா